DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1437 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 20, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# "உதயன் பல்சுவைக் கலைவிழா – 2023" மண்டபம் நிறைந்த விருந்தினர்களுடன் சிறப்பாக நடைபெற்றது



"கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ நகரில் உள்ள "ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "உதயன் பல்சுவைக் கலைவிழா-2023" மண்டபம் நிறைந்த விருந்தினர்கள் பார்வையாளர்கள் உடன் சிறப்பாக நடைபெற்றது.
விழாவின் பிரதம விருந்தினராக சுவிற்சலாந்து வாழ் எழுத்தாளர் கல்லாறு சதீஸ் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். நிகழ்ச்சித் தொகுப்பாளராக மதிசயன் பணியாற்றினார். வரவேற்புரையை உதயன் குழுமத்தின் நீண்ட நாள் நண்பர் பாஸ்டர் சோதி நிகழ்த்தினார். மேற்படி விழா இனிதே நடைபெற ஆதரவு வழங்கிய வர்த்தகப் பெருமக்கள் மேடையில் கௌரவிக்கப்பெற்றனர். இங்கே காணப்படும் படங்களில் அவர்கள் காணப்படுகின்றனர்.
(உள்ளே விபரமான விளம்பரம் ம் பக்கத்தில்)

# Latika Productions நிறுவனம் வழங்கும் "இசை வெள்ளம் – 2023 நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் தென்னிந்தியக் கலைஞர்கள் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்கள்



ஸ்காபுறோ நகருக்கு கிழக்குப் புறமாக சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ள **WHITBY CANADA EVENT CENTRE** மண்டபத்தில் எதிர்வரும் 21-10-2023 சனிக்கிழமையன்று நடைபெறவுள்ள **Latika Productions** வழங்கும் "இசை வெள்ளம்-2023 மாபெரும் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் தென்னிந்தியக் கலைஞர்கள் நேற்று வியாழக்கிழமையன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்கள். கனடா ஸ்காபுறோ நகரில் உள்ள எஸ்டேட் பாங்குவற் ஹோல் மண்டபத்தில் நடைபெற்ற சந்திப்பில் பிரபல பாடகர்கள் உன்னி மேனன். சைந்தவி. ரம்யா நம்பீசன். ரேஹேனா உட்பட சுப்பர் சிங்கர் மற்றும் "சரிகமப" வெற்றியாளர்கள் பலர் பிரதான மேடையில் அமர்ந்திருந்து சபையோரோடு உரையாடுவதைக் காணலாம்.
(உள்ளே விபரமான விளம்பரம் 14ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0 Google Reviews
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

# கனடாவில் இயங்கிவரும் 'ஹோட்டல் சரவணா பவன்' உணவகத்தின் முதலாவது கிளை ஆரம்பிக்கப்பெற்று 21 வது ஆண்டைக் கொண்டாடிய உரிமையாளர்களும் ஊழியர்களும்










கனடாவில் இயங்கிவரும் 3 கிளைகள் கொண்ட "ஹோட்டல் சரவணா பவன்" உணவகத்தின் முதலாவது கிளை ஆரம்பிக்கப்பெற்று 21 வது ஆண்டைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த சிறப்பான வைபவத்தில் உ ரிமையாளர்களும் ஊழியர்களும் 21வது ஆண்டு விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தற்போது மிசிசாகா மற்றும் வன்குவர் மற்றும் ஸ்காபுறோ ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டு இயங்கும் "ஹோட்டல் சரவணா பவன்" நிறுவனத்தின் உரிமையாளராக விளங்கும் தொழி-திபரும் வர்த்தகப் பிரமுகரருமான கணேசன் சுகுமார் அவர்கள் இந்த சிறப்பான வைபவத்தை தனது ஸ்காபுறோ கிளையில் ஏற்பாடு செய்திருந்தார்.

அன்றைய தினம் இங்கு 21 வருடங்கள் கடமையாற்றிய பிரதம சமையல் வல்லுனர்கள் மற்றும் ஏனைய தர ஊழியர்கள் மற்றும் பத்து வருடங்கள் பணியாற்றிய ஊழியர் என அனைத்து தரப்பினருக்கும் பாராட்டுப் பத்திரங்களும் பொற்கிழிகளும் வழங்கப்பெற்றன.

"ஹோட்டல் சரவணா பவன்" உணவகத்தின் தலைமை அலுவலகம் தமிழ்நாட்டில் இயங்கினாலும் கனடாவில் 3 கிளைகளையும் நேர்த்தியாக நிர்வகித்து வரும் கணேசன் சுகுமார் அவர்களையும் பணியாளர்களையும் அனைவரும் பாராட்டுகின்றனர்




# கனடா பாரதி கலா மன்றமும் வித்யா பாரதி – கனடா அமைப்பும் இணைந்து நடத்திய "வித்யா பாரதி கலைச்சேவை விருது விழா"

கடந்த 15-10-2023 ஞாயிற்றுக் கிழமையன்று ஈற்றோபிக்கோ நகரில் கனடா பாரதி கலா மன்றமும் "வித்யா பாரதி- கனடா அமைப்பும் இணைந்து நடத்திய "வித்யா பாரதி கலைச்சேவை விருது விழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விருதுகள் வழங்கும் விழாவில் கனடாவில் கலைச்சேவை ஆற்றியவரும் இசையாசிரியர்கள் மற்றும் நடன ஆசிரியைகள் போன்ற பலர் கௌரவிக்கப்பெற்றனர்.







அவர்களின் இளம் கலைச் சேவை விருது திருமதி நிவேதா இராமலிங்கம் என்னும் நடன ஆசிரியைக்கு வழங்கப்பெற்றது. இந்த விருதியை தொழிலதிபர் கணேசர் சுகுமார் அவர்கள் தனது மறைந்த துணைவியார் ஷீலா சுகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக அவருக்கு வழங்கினார்.

இந்த விழாவில் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்றும் கலைஞர்களான திருமதி தனதேவி மித்ரதேவா திருமதி லதா பதா ஆகியோர்க்கும் "வித்யா பாரதி-கலைச்சேவை விருதுகள் வழங்கப்பெற்றன.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.



Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# உதயன் கதிரோட்டம்

## இந்திய – கனடா இராஜதந்திர மோதல்கள் அதிகரிப்பினால் இழப்புக்களும் இடைவெளிகளும் அதிகரிக்கின்றனவா?

கடந்த சில மாதங்களாக இந்திய-கனடிய இராஜதந்திர உறவுகளில் 'கிழிசல்கள்' ஏற்பட்டு அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து செல்லும் முரண்பாட்டுத் தர்க்கங்களினால் இன்னும் விசாலமாக்கப்படுவதற்கான சாத்தியங்கள் நிறையவே காணப்படுகின்றன என்பதை இரண்டு நாடுகளையும் இணைத்துப் பார்க்கும் அன்பர்கள் கண்டு கொள்கின்றார்கள்.

'காலிஸ்த்தான்' ஆதரவு நடவடிக்கைகள் கனடாவில் மறைமுகமாக அதிகரித்து வருவதையும் அதனால் தனது நாட்டிற்கு எதிராக கனடாவில் 'முகாம்கள்' அமைக்கப்பட்டு அவை செயலூக்கம் பெற்று தொடர்ச்சியாக இந்தியாவிற்கு அச்சுறுத்தல்கள் அதிகமாக உள்ளன என் இந்தியா எச்சரித்து வந்தது என்பதையும் தொடர்ந்து இந்தியாவின் கருத்து தொடர்பாக கனடா தெரிவித்த கருத்துக்கள் இந்தியாவை ஆத்திரமடையச் செய்ததன் விளைவாக இருநாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்து நின்றமையும் எவரும் விரும்புகின்ற ஒன்றாக கணிக்கப்படவில்லை.

ஆனால் இவ்வாறான முரண்பாடுகளின் அதிகரிப்பு இரு நாடுகளுக்கிடையிலும். புல பாரிய நஸ்டங்களைக் கொண்டு வந்துள்ளன என்பதும் புலனாகின்றது.

கனடாவின் 41 தூதர்கள் மற்றும் அவர்களது 42 குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை இந்தியாவில் இருந்து கனடா வெளியேற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதனால் பாரிய அளவில் இருநாடுகளுக்கிடையிலும் மேற்கொள்ளப்பட்டு வந்த தூதரங்களுக்கிடையிலான நட்பு பாராட்டும் நிலை மாறி 'மோதல்' தன்மை நீண்டு செல்வதையும் இதற்கு காரணம் அரசியல்வாதிகளும் நிர்வாக பீடத்தில் உயர் நிலையில் ஆலோசகர்களாக விளங்குகின்றவர்களும் உள்ளார்கள் என்று இருநாடுகளிலும் வாழும் 'பொதுமகன்கள்' கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில். கனேடிய தூதரக அதிகாரிகளின் அதிகாரத்தைப் பறிப்பதாக இந்தியா விடுத்துள்ள மிரட்டலை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி நேற்று 19ம் திகதி ஒட்டாவாவில் வைத்து தெரிவித்த நிலையில் இந்தியாவும் மறு நடவடிக்கையாக தூதரக மட்டத்தில் பல மாற்றங்களைச் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. இதனால் இரு நாடுகளையும் சார்ந்து மேற்கொள்ளப்படும் பயணங்கள், வர்த்தக முயற்சிகள் அனைத்தும் தகடு பொடியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

துற்போது. இந்தியாவிலிருந்து உயர் கல்வி கற்பதற்காக வந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் தடுமாற்றம் அடைந்துள்ளார்கள். அவர்களின் கல்வி சார் நடவடிக்கைகளில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தியாவில் மொத்தாக உள்ள கனடா தூதரக அதிகாரிகளில் 21 பேர்களின் அதிகாரங்களைப் பறிக்க இருப்பதாகவும், ஒக்டோபர் 20ஆம் திகதி வரையில் அவகாசம் அளிக்கப்பட்டதாகவும் அமைச்சர் மெலனி ஜோலி மேலும் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய சூழலில் 21 தூதர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை மட்டுமே தங்கள் தூதரக அந்தஸ்தை பராமரிக்க இந்தியா அனுமதிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே, கைது உள்ளிட்ட தீவிர நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்கும் முன்னர் கனடா தமது தூதரக அதிகாரிகளை வெளியேற்றியுள்ளதாகவும் கனடாவின் வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து இரு நாடுகளின் உறவுகளை மேலும் மோசமாக்குகின்றன.

இந்தியாவில் கனேடியர்கள் மற்றும் நமது தூதர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவலை இருப்பதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர் ஜோலி, நமது தூதரக அதிகாரிகளை பத்திரமாக அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முரண்பாடுகளை தவிர்த்து இரு நாட்டு மக்களையும் கவனத்தில் எடுத்து இராஜதந்திர உறவுகளை சீர் செய்வது தான் தற்போதைய தேவை என்றும் நாம் கருதுகின்றோம்.




**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**

**Cobourg** நகரத்திலும் **Downtown Toronto** விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு **Cook** மற்றும் **Kitchen Help** ஆகியோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. **Cobourg** நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
*416 294 7887*

**முதியவர் ஒருவரை பராமரிக்க பெண் தேவை**

**MARKHAM & SHEPPARD** பகுதியில் முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கும் சமைத்துக் கொடுப்பதற்கும் பெண் ஒருவர் அல்லது **Middle age couple** தேவை. தங்குவதற்கு அறையும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 437-553-9705

## ஸ்காபுறோவில் இயங்கிவரும் Latika Productions நிறுவனம் வழங்கும் ... *(முன்பக்கத் தொடர்ச்சி)*

கனடா ஸ்காபுறோ நகரில் உள்ள எஸ்டேட் பாங்குவற் ஹோல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த கலைஞர்கள்-பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பிரபல பாடகர்கள் உ ன்னி மேனன்.சௌந்தவி. ரம்யா நம்பீசன். ரேஹேனா உட்பட சுப்பர் சிங்கர் மற்றும் "சரிகமப" வெற்றியாளர்கள் பலர் இணைந்து இந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்தினார்கள்.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இந்த மாபெரும் இசை நிகழ்ச்சியான எமது இசை ரசிகர்களை நன்கு மகிழ்விக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இசை வெள்ளம் -2023 நிகழ்ச்சி நடைபெறவுள்ள மண்டபம் **WHITBY CANADA EVENT CENTRE .** அனுமதிச் சீட்டுக்களுக்கு 647 996 5922/416 423 75

**DISWASHER தேவை**

**14th Ave./ Birchmount** சந்திக்கு அருகில் உள்ள கனேடிய உணவகத்திற்கு **DISWASHER** ஒருவர் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு :
**NICK - 905 477 1161**

**ஸ்காபுறோவில் Saree Blouse Cutting Classes**

இலங்கையில் தையல் துறையில் பலவருட அனுபவமுள்ள பெண் **(Tailor)** ஒருவரினால் நியாயமான விலையில் சேலைக்கு சட்டை **(Saree Blouse)** தைத்துக் கொடுப்பதோடு, சேலைக்கு சட்டை தைப்பதற்கான வகுப்புகளும் **(Saree Blouse Cutting / Classes Ellesmere** - மற்றும் **Scarborough** நகரிலும் **(Centennial/ Community Centre - Markham & Ellesmere - 1967 Ellesmere Road)**லும் நடத்தப்படுகின்றது.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்:
தர்மா - 437-833-2660 905-268-0272

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இரட்டை நிலைப்பாடு கொண்ட விக்னேஸ்வரன் போன்றவர்களால் தமிழ் மக்களுக்கு தீர்வு எதனையும் பெற்றுக்கொடுக்க முடியாது — ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு!

பு. கஜிந்தன்




இரட்டை நிலைப்பாடு கொண்டவர்களால் தமிழ் மக்களுக்கு எவ்விதமான தீர்வுகளையும் பெற்றுக்கொடுக்க முடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 13.10.2023 அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், முல்லைத்தீவு நீதிபதிக்கு ஆங்கில புலமை போதாமையால் அவருக்கு சட்டமா அதிபர் அலுவலகத்தால் கூறப்பட்ட கூற்றை தவறாக விளங்கிக்கொண்டார் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

வடக்கு மாகாண சபையின் அதிகாரம் கிடைத்திருந்தும் வினைத்திறனற்ற முதல்வராக பதவி வகித்த சி.வி. விக்னேஸ்வரன் கடந்த காலங்களில் அரசுக்கு விசுவாசமாக செயற்பட்டதுடன் தமிழர்களின் அரசியல் உரிமைக்காக போராடியவர்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி சிறையிலிட்டவருமாவார்.

அதேபோன்று இவர் எந்த சந்தர்ப்பத்திலும் மக்களின் உரிமைக்காக போராடியவர்களை விடுதலைப் போராளிகள் என கூறியதும் கிடையாது. அதுமட்டுமல்லாது இவரது தீர்ப்புகளால் நாட்டை விட்டு புலம்பெயர்ந்தவர்களும் பலர் உள்ளனர்.

இதனிடையே தற்போது ஹர்த்தால் அனுஸ்டிக்கப்போவதாக அவரும் அவரது கூட்டாளிக் கட்சிகளும் சந்திப்புக்களை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வருகின்றன. உண்மையில் மனிதச் சங்கிலி, ஹர்த்தால் போராட்டங்கள் பொருளாதாரத்தை நலிவடைய செய்து அன்றாட ஜீவனோபாயத்திற்கு ஏங்கும் எமது மக்களின் வறுமையை மேலும் அதிகரிக்குமே தவிர இவர்களது போராட்டத்தை தென்னிலங்கை கண்டுகொள்ளப் போவதில்லை.

மாறாக வடக்கு கிழக்கில் அரசுக்கு எதிரான போராட்டகள் எனக்கூறி நடைபெறும் இவர்களது இவ்வாறான செயற்பாடுகள் தென்னிலங்கையின் சிங்கள தேசியத்தை வலும்படுத்துவதற்கும் அதற்கான முகவர்களாக இவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதே உண்மையாகும் - என்றார்.

# யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மாளிகையை ஏலம் விடுவதற்கு முயற்சி — உரிமையாளர்களுக்கு அறிவிக்காமல் திரைமறைவில் சூழ்ச்சி



யாழ்ப்பாணம் வலி வடக்கில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அதனுடன் சூழ உள்ள தனியார் காணிகளை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்க திரைமறைவில் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, வலி. வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கீரிமலைக்குச் செல்லும் பகுதியில், மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த முதல் ஆட்சியில் ஜனாதிபதி தங்குவதற்காக வலி வடக்கில் ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டது.

சுமார் 17 தனி நபர்களின் காணிகள் ஜனாதிபதி மாளிகை மற்றும் அதனை சூழ உள்ள வெளிப்புற பாதுகாப்பு பகுதிக்காக கையகப்படுத்தப்பட்டது.

இன் நிலையில் தற்போது உரிமையாளர்களுக்கு அறிவிக்காமலும் அவர்களின் சம்மதம் பெறப்படாமலும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகளை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

குறித்த ஜனாதிபதி மாளிகையை வடக்கு மாகாண சபை தமக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்த நிலையில் உரிய தரப்புக்கும் அதற்கு சாதகமான பதிலை வழங்கவில்லை.

குறித்த மாளிகை அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் அனேகமானவர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நிலையில் அவர்களுக்கு தெரியாமல் அதனை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் முயற்சிகள் இடம் பெற்று வருகிறது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் உரிய கவனம் எடுக்க வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

# இந்திய — இலங்கை அரசுகளின் திட்டத்திற்குள் சிக்கி பலிக்கடா ஆக வேண்டாம் — இசையமைப்பாளர் சந்தோஷிடம் முன்னணி கோரிக்கை

எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில், தென்னிந்திய பிரபல இசையமைப்பாளரால் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சியானது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த இசை நிகழ்ச்சியை அந்த நாட்களில் நடாத்த வேண்டாம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இதனை குறிப்பிட்டுள்ளனர். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தாங்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலிவை வெளிக்கொணரும் தங்களின் இசையமைப்பில் உருவான பாடல்களையும், இசையையும் ஈழத் தமிழ் மக்களாகிய நாங்களும் கேட்டு இரசித்து மகிழ்கிறோம். அந்த வகையில் உங்களுக்கு ஏராளமான இரசிகர்கள் எம்மத்தியில் இருக்கிறார்கள்.

பாரிய இனவழிப்பினை தமிழினம் சந்தித்ததனை நீங்கள் அறிவீர்கள். இவ்வினவழிப்பில் கொல்லப்பட்ட மக்களினை நினைவேந்தல் செய்வதன் முக்கியத்துவத்தையும் நீங்கள் உணர்வீர்கள். இந்தநிலையில், தங்களால் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ள ஒக்டோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளாகிய இதே தினங்களில் 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிக்கொண்டிருந்த வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட நோயாளர்கள் பொதுமக்கள் இந்திய அமைதிப்படையினரால் கட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தவர் என்பதனை நீங்கள் அறிந்திருக்கக்கூடும்.

அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை வருடா வருடம் நினைவுகூரப்பட்டு வருகிறது. இந்த துயர்மிகுந்த நாட்களில், நினைவேந்தல்களூடாக அடுத்த சந்ததியினருக்கு தமிழின போராட்டத்தின் நியாயங்கள் சென்றடையும் என நாம் நம்புகிறோம். இதனை மடைமாற்றி இந்நாட்களை இளைஞர்களுக்கான மகிழ்ச்சிகரமான களியாட்ட நாட்களாக மாற்றியமைக்க முயலும் இலங்கை இந்திய அரசுகள், தங்களை பலிக்கடாவாக்க முயல்கிறார்கள்.

இந்நினைவேந்தல் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இசை நிகழ்ச்சிகளில் தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ கலந்து கொள்வதானது, அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை அவமதிக்கும் செயற்பாடு என்பதுடன் பேரினவாதத்தால் இன்றும் தடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு துணைநிற்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும்.

மேற்படி நினைவேந்தல்களூடாக தமிழினம் அடுத்த சந்ததிக்கு கடத்த முயலும் தமிழின விடுதலை வேட்கைக்கும் எதிரான செயற்பாடாகவும் அமையும். தாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்திருப்பவர் என்னும் வகையில், இந்திய படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நினைவு தினங்களில் தங்களின் இசை நிகழ்ச்சி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது, இன்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களால் தவறாகவே பார்க்கப்படும் என்பதனை அன்புரிமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இறந்தவர்களை நினைவேந்தும் உரிமையை சர்வதேச சட்டங்களும் இலங்கைச் சட்டங்களும் அனுமதித்துள்ள போதும், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு சட்டவிரோதமாக தடைகளை ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தரப்புக்கள், நினைவேந்தல்களுக்கு சட்டரீதியாக தடைகளை ஏற்படுத்த முடியாதபோது, இந்நாட்களைத் தெரிவு செய்து களியாட்ட தினங்களாக மாற்றும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய முயற்சிகளை புரிந்துகொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உலகத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் இரசிகத்தளத்தைக் கொண்டிருக்கும் தாங்கள், தமிழ்மக்களின் வலிகளையும், இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் வேதனைகளையும் உணர்ந்துகொண்டு, மதிப்பளித்து குறித்த திகதிகளை மாத்தி பொருத்தமான வேறொரு திகதியில் தங்கள் நிகழ்வை மாற்றியமைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் பொழிந்த மழை — விவசாயிகள் மகிழ்ச்சியில்!

பெரும்போக நெல் விதைப்பு காலமானது ஆரம்த்த நிலையில் மழை பெய்யாமையினால் விவசாயிகள் மிகுந்த கவலையில் காணப்பட்டனர்.

இதனால் விதைப்புகள் பின்தள்ளப்படுமா, விளைச்சல் கிடைக்குமா என்ற அச்சத்தில் விவசாயிகள் காணப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் விதைப்பிற்கு ஏற்ற வகையில் மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. அந்தவகையில் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மோதல் தொடர்பிலான கலந்துரையாடல்!





இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மோதல் தொடர்பாக யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியம், மற்றும் கல்விச்சமூகத்தின் நிலைப்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு ஆலய மண்டவத்தில் நடைபெற்றது.

இதில் வல்லரசு நாடுகளின் கீழ் உள்ள இஸ்ரயேல், பாலஸ்தீன ஆகிய நாடுகளின் மோதல்கள், மற்றும் கொல்லப்பட்ட மக்களில் நிலைப்பாடு, இலங்கை, இந்தியா நாடுகளின் ஆதிக்க தன்னை, சர்வதேச நாடுகள் மட்டத்தில் இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளின் மோதல் தொடர்பான சர்வதேச பார்வைகள், தேசிய இனத்தின் அழிவுக்கான பாதை, மனித உரிமைகள் மீறல், ஒடுக்கப்படுகின்ற தேசிய இனம், அரசபயங்காரவாதம், கமாஸ் பயங்கரவாத சட்டம், சர்வதேச நாடுகளுடாக அன் நாட்டின் ஜனாதிபதி, மற்றும் பிரதமர் ஆகியவர்களுடான உரையாடல்கள் பற்றியும் இதில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இதில் ஏற்புரையினை அருட்தந்தை ஏம்.வி.சி ரவிச்சந்திரன் ஆற்றினார். அத்துடன் சிறப்பு பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசியல்த்துறை விரிவுரையாளர் கே.ரீ. கணேசலிங்கம் நிகழ்த்தினார். இதில் அருட்தந்தையினர், அருட்சகோதர்கள் கல்வியாளர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லையென இலங்கை அரசின் ஊடகங்களான "தினகரன்" மற்றும் "தினமின"வில் செய்தி



உயிர் அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ததாக அறிவித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் அல்லது வேறு எந்த வகையிலும் அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லையெனவும் அவரது வெளிநாட்டுப் பயணமானது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது எனவும் இலங்கை அரசின் அச்சு ஊடகங்களான தினகரன் மற்றும் தினமின செய்தி வெளியிட்டிருந்தன.

குற்றபு: புலனாய்வுத் திணைக்களம் (CID), அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைய இந்த தகவல் தெரியவந்துள்ளதாக குறித்த செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இந்த தகவலை உறுதிப்படுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதவானின் மனைவி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும் நீதவான் சரவணராஜாவுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக வெளியாகும் தகவல்கள் குறித்து, சட்டமா அதிபர் திணைக்களத்திடமோ அல்லது திணைக்களத்தின் அதிகாரிகளிடமோ விசாரணைகள் எதுவும் முன்னெடுத்ததாக குறித்த செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

"நீதிபதி சரவணராஜாவின் மனைவி, முல்லைத்தீவு மேலதிக நீதிபதி டி. பிரதீபன், முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.யூ.பீ. அமரதுங்க, முல்லைத்தீவு பொலிஸ் தலைமையக பதில் ஆய்வாளர் W.G.H.N.K. திலகரட்ன, நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி கொன்ஸ்டபிள் கே.எஸ். பிரேமன், தனிப்பட்ட பாதுகாப்பு கொன்ஸ்டபிள் கே. சிவகாந்தன், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தின் பொலிஸ் கொன்ஸ்டபிள் எம். முதிசன், முல்லைத்தீவு பொலிஸ் கொன்ஸ்டபிள் ஆகிய சமரகோன் மற்றும் சந்தருவன், முல்லைத்தீவு நீதிமன்ற பதிவாளர் பீ. சரவணராஜா, நீதிபதியின் அலுவலக எழுத்தர் பீ. சுசிகன், பிஸ்கல் எஸ். சிவக்குமார் மற்றும் முல்லைத்தீவு நீதிமன்ற உத்தியோகத்தர் ஜே. லின்டன் ராஜா" ஆகியோரிடம் சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறித்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேலும், முல்லைத்தீவு நீதவான் மற்றும் மாவட்ட நீதிபதி டி. சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, கடந்த 3ஆம் திகதி அந்த ஆணைக்குழு அறிவித்திருந்தது.

எனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கேட்டறிந்ததாக அந்த செய்தியில் எவ்வித தகவலும் குறிப்பிடப்படவில்லை.

சட்டமா அதிபர் அழுத்தங்களை பிரயோகிப்பதற்காக நீதவானை, சட்டமா அதிபர் திணைகளத்திற்கு அழைக்கவில்லை எனவும், நீதவான் என்ற அடிப்படையில், அவர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காகவே அவர் கொழும்பிற்கு அழைக்கப்பட்டதாகவும், சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளதாக, ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் இந்த தகவல் தொடர்பிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்துகள் எதனையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் பதிவு செய்ததாக குறித்த தினமின செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை, அரச அச்சு ஊடகங்களின் செய்திக்கு மூலாதாரமாக குறிப்பிடப்படும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை அறிக்கை இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை கண்டிக்கும் இன்றய பொது முடக்கத்திற்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களும் ஆதரவு

முல்லைத்தீவு நீதிபதி டீ. சரவணராஜா அவர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கையை கண்டிக்கும் வகையில் தமிழ் அரசியல் கட்சிகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள 20-10-2023 அன்று பூரண கதவடைப்பு பொது முடக்கத்திற்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் வர்த்தகர்கள் உள்ளிட்ட முஸ்லிம் மக்களும் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கையானது உண்மையில் நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கை மட்டுமன்றி ஜனநாயகத்தின் மிகப் பிரதான தூண்களில் ஒன்றான நீதித்துறை சுதந்திரத்தினையும் கேள்விக்குட்படுத்துகின்றது. இந் நடவடிக்கையினை நாம் வண்மையாக கண்டிக்கின்றோம்.

தமது சுயநல அரசியல் இலாபத்திற்காக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களை கூறுபோட நினைக்கும் சக்திகளால் இது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இருந்து தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருகின்றது. அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு மித்த குரலில் ஒன்றினைந்து நாளைய 20ஆம் திகதிய கடையடைப்பு நடவடிக்கையில் ஒன்றுபடுவோம்.

நீதித்துறை சுதந்திரத்திற்கு நீதி கோருவதுடன், வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கட்டவிழ்த்துவிடப்படும் இது போன்ற சதித்திட்டங்களையும் தமிழ் பேசும் மக்கள் ஒன்றினைந்து எதிர்கொண்டு முன்னோக்கிய பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வோமாக என்று இத் தருணத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம்.

நாம் "தமிழ் பேசும் மக்களாக" தொடர்ந்தும் முன்னோக்கி பயணிப்போம் என்பதை நாளை பொது முடக்கத்தில் ஒன்றினைவதன் ஊடாக உறுதிப்படுத்துவதுடன், பொது முடக்கத்தில் ஒன்றித்து நிற்கும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒருமித்த நிலைப்பாடு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் - முஸ்லிம் மக்களை ஒருபோதும் பிரித்து கூறுபோட முடியாது என்பதை பகிரங்கமாக அரசுக்கும், சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை - என குறிப்பிடப்பட்டுள்ளது.



# விவசாயிகளிடம் கழிவு அறவிடுபவர்களை கைது செய்க – அமைச்சர் அறிவிப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10வீத கழிவு நடைமுறையினை உடனடியாக நிறுத்தி குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு விவசாய அமைச்சர் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரினால், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து 10வீத கழிவு அறவிடும் நடைமுறை செயற்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக திருநெல்வேலி, மருதனார் மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் இந்த விவசாயிகளிடம் கழிவு அறவிடும் நடைமுறை இடம்பெற்று வருகின்றது. குறித்த சந்தைகளில் விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு அவர்களிடம் இந்த கழிவு அறவிடப்படுகின்றது எனவே விவசாயிகள் இது தொடர்பில் முறைபாட்டினை பதிவு செய்வதில் தயக்கம் காட்டுவார்கள். எனவே பொதுவான தீர்மானமாக பொதுவான முறைப்பாடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த விடயம்தொடர்பில் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து, குறித்த விடயம் தொடர்பில் பொலிசார் இதனை தடுத்த நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்த கூட்டத்தின் தீர்மானமாக 10வீத கழிவு அறவிடும் நடை முறையினை நிறுத்த கோரிய முறைப்பாட்டினை முன் வைக்கின்றோம். எனவே உடனடியாக தடுத்து நிறுத்துவதோடு குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.

அத்தோடு குறித்த சம்பவத்தினை பொலிசாரால் மாத்திரம் தடுத்து நிறுத்த முடியாது இதற்கு பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் கழிவு நடைமுறை தொடர்பிலான சகல தகவல்களையும் பொலிசாருக்கு வழங்கினால் பொலிசாரினால் அதனை கட்டுப்படுத்தி சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு இலகுவாக இருக்கும் எனவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.



மேலும் எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைகள் சந்தைகளை குத்தகைக்கு கொடுக்கும்போது இந்த கழிவு நடைமுறை அமுல்படுத்த கூடாது என்ற நிபந்தனையும் பின்பற்றிய வழங்க வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாக்குதல் சம்பவம் – பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணி நீக்கம்!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வந்த நபர் மீது தாக்குதல் முயற்சியை மேற்கொண்ட இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இன்றிலிருந்து கடமை நீக்கம் செய்யப்படுவதாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நுழைவாயிலில் வைத்து, வைத்தியசாலைக்கு வந்த நபர் ஒருவர் பாதுகாப்பு ஊழியர்களால் தாக்கப்பட்ட சம்பவமானது கண்டிக்கப்பட வேண்டியது. இந்த விடயத்தை நான் மிகவும் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளதோடு குறித்த பாதுகாப்பு கடமைகள் ஈடுபடும் தனியார் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு காவலாளிகளையும் இன்றிலிருந்து வைத்தியசாலை பாதுகாப்பு கடமைக்கு அனுப்ப வேண்டாம் எனவும் அவர்களுக்கு எச்சரித்துள்ளேன். எனினும் இவ்வாறான சம்பவங்களை இனி மேலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதாவது பொதுமக்கள் வைத்தியசாலைக்கு சுதந்திரமாக வந்து தமது மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் மூலம் அவை மழுங்கடிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மதுபோதையில் வந்த நபர் அநாகரிகமாக நடந்து கொண்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தாக்குதலை மேற்கொண்டு வைத்தியசாலைக்குள் செல்ல முற்பட்ட போதே பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், அந்நபர் மீது தாக்குதலை மேற்கொண்டனர் என பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தரப்பு தெரிவித்தது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகில் நபர் ஒருவரை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தாக்கும் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகியது.

சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் தாக்குதலுக்கு இலக்கான நபரையும், தாக்குதல் மேற்கொண்ட பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இருவரையும் கைது செய்து விசாரணைகள் மேற்கொண்ட நிலையில் தாக்குதல் நடத்திய காவலாளிகள் தாங்கள் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் பொலிசில் விளக்கமளித்துள்ளனர்.


# எழுதுமட்டுவாழ் கிராமத்தில் உள்ள மாம்பழ உற்பத்தி வலயத்தை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர



யாழ்ப்பாண தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் கிராமத்தில் உள்ள மாம்பழ உற்பத்தி வலயத்தை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர 15-10-2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பார்வையிட்டிருந்தார்.

கடந்த 2018ஆம் ஆண்டு விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மேற்படி மாம்பழ உற்பத்தி வலயமானது 500 செய்கையாளர்களை உள்ளடக்கியுள்ள நிலையில் விவசாய அமைச்சர் செய்கையாளர்களைச் சந்தித்து அவர்களுடைய குறை நிறைகளை கேட்டறிந்திருந்தார்.

இதன்போது விவசாயிகள், குரங்குகளை கட்டுப்படுத்த வாயுத் துப்பாக்கி, வீதிப் புனரமைப்பு மற்றும் மாம்பழத்தை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.






யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் விவசாய பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதனுடைய ஏற்பாட்டில் குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2000ம் ஒக்டோபர் 19ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆயுத முனையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவேந்தல்



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் அவர்களின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் 19-10-2023 அன்று இடம்பெற்றது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றி, மலர் அஞ்சலி தூவி, அக வணக்கம் செலுத்தப்பட்டது.

போர் சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணிவாக ஊடகப்பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

இந்நிலையில் கடந்த 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுத தாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.



இதன்போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர். அதன் போது வீட்டில் இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் போதையில் வாகனம் செலுத்திய இ.போ.ச சாரதிக்கு விளக்கமறியல்

மன்னார் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான போரூந்தை மது போதையில் ஓட்டி சென்ற சாரதி யை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் பேருந்து நிலையத்தில் இருந்து புதன்கிழமை (18) மாலை தலைமன்னார் நோக்கி பயணிகளுடன் சென்ற பேருந்தின் சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்திய நிலையில் மன்னார் போக்குவரத்து பொலிஸாரால் புதன்கிழமை மாலை மன்னார் வைத்தியசாலை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்தியமை உறுதி செய்யப்பட்ட நிலையில் சாரதியை வியாழக்கிழமை (19) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த சாரதி யை எதிர்வரும் 23ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பாக வவுனியா நகரில் துண்டுப்பிரசுரம் விநியோகம்



- மன்னார் நிருபர்
(18-10-2023)

வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால்போராட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியகட்சிகளின் கூட்டமைப்பால் வவுனியா நகரில் துண்டு பிரசுரங்கள் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாக செயற்ப்பட முடியாத நிலமை, வடக்கு கிழக்கில் பொத்தமயமாக்கல், தமிழர் பிரச்சனைக்கு உள்நாட்டில் நீதியை காணமுடியாது போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடங்கி 20ம்திகதி வெள்ளிக்கிழமை கர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துண்டு பிரசுர விநியோகத்தின் போது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நகரசபை தலைவர் இ.கௌதமன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் என பலரும் கலந்து கொண்டு துண்டு பிரசுரங்களை வழங்கும் செயற்பாடு செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தனர்.



# தென்மராட்சி பகுதிகளில் ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்!



20ஆம் திகதி அரசியல் கட்சிகளால் வடக்கு கிழக்கு மாகாணங்களை முடக்கி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் குறித்த ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றையதினம் தென்மராட்சி பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த துண்டு பிரசுரங்களானது தென்மராட்சி மக்கள் உரிமை பாதுகாப்பு அமைப்பினால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த துண்டு பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் வடக்கு கிழக்கை முடக்கி ஹர்த்தால் போடுவதன் மூலம் பாதிக்கப்படுவது யார்?

இந்த ஹர்த்தால் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகும் தீர்வு என்ன?

காலங்காலமாக போடப்பட்ட ஹர்த்தால் மூலம் தமிழ் மக்கள் அடைந்த இலாபம் என்ன?

தெற்கை முடக்கினால் வரவேற்கத்தக்கது ஆனால் வடக்கு கிழக்கை முடக்கி மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்கதன்று. நாட்டில் தொடரும் வங்குரோத்து நிலையில் வியாபாரிகள் வியாபாரம் இல்லாது அல்லாடி வரும் நிலையில் இவ்வாறான கடையடைப்பின் மூலம் கிடைக்கப்போரும் நன்மை என்ன என வியாபாரிகளும் விசனம் தெரிவித்து வருவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

கொரோனா வைரஸ் காரணமாக பல்வேறு இடர்களைக் கடந்து மீண்டு வந்த மக்களுக்கு அடுத்த பேரிடியாக பொருளாதாரா நெருக்கடி ஏற்பட்டது இதிலிருந்து மீள முடியாமல் மக்கள் திண்டாடி வரும் நிலையில் இவ்வாறான ஹர்த்தால் எவ்வகையில் நியாயமானது?

ஒன்று சேர முடியாத தமிழ் கட்சிகள் தமிழர்களின் அபிலாசைகளை எப்போது நிறைவேற்றுவார்கள்?

தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நாடகமாடும் இவர்களின் செயற்பாடு மக்களுக்கு எதையுமே பெற்றுக் கொடுக்கப்போவதில்லை என்பது திண்ணம் அரசியல் கட்சிகள் தங்களது இருப்பிற்கும் வாக்கு வங்கியை சரிய வீடாமல் காப்பாற்றுவதற்குமே இவ்வாறான வேலைத்திட்டங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சிந்தித்து செயற்படுங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா *அறிவித்தல்*

**பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும்**
**நிர்வாக ஆண்டு (2023--2025)**

காலம்: 28-10-2023 (சனிக்கிழமை)
இடம்: றொறன்ரோ நகரசபை மண்டபம்
Scarborough Civic Centre (Room 1&2)
150 Borough Dr, Scarborough
காலம்: 4:00 மாலை - 6:00 மாலை

ஊர் அபிமானிகள் மற்றும் ஒன்றிய அங்கத்தவர்கள் அனைவரையும் இப்பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்து நல்லாலோசனைகளிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:
சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-0422
ப. கஜஜெயன்: (416) 732-5898

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வரட்சியாலும் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவு தொகை வழங்கிய அமைச்சர்!





விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரட்சியாலும், பொருளாதார வீழ்ச்சியிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பாலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கலந்து கொண்டு 40 விவசாயிகளுக்கான முதற்கட்டமாக வழங்கி வைத்தார்.

இங்கு வரட்சியாலும், பொருளாதார ரீதியாக பின்னடைந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான தலா ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபா முதல் இருபது ஆயிரம் ரூபா வரை இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

மேலும் புதிதாக விவசாய ஓய்வூதியக்கொடுப்பனவுக்காக 05 நபர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எச்.எம் சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, பிரதேச செயலர்கள் துறை சார் திணைக்கள தலைவர்கள் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

# மறவன்புலவு சச்சிதானந்தனுக்கு வணிக சங்கம் கௌரவிப்பு





நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் தொடக்க விழா சனிக்கிழமை (4) நாகப்பட்டினம் துறையில் காலை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்பலவு சச்சிதானந்தனும் சென்ற நிலையில் குறித்த கப்பல் சேவையை செயற்படுத்துவதற்கு முன் நின்று உழைத்தமைக்காக நாகப்பட்டினம் வணிகர் சங்கத்தினர் அவரின் சேவையை பாராட்டி கௌரவித்தனர்.



# எமது பிரச்சனைகளை அரசியலாக்காது, பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் – அன்னராசா தெரிவிப்பு

எமது பிரச்சனைகளை அரசியலாக்காது, பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் சமாசத்தின் செயலாளர் அ. அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழக கடற்தொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி கொடுப்பது தொடர்பாக அராசங்கம் பரிசீலிப்பதாக இலங்கை பிரதமர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கை கடற்தொழில் அமைச்சர், தமிழக கடற்தொழிலாளர்களின் படகை ஒரு நொடி கூட அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு கடற்தொழிலாளர்கள் பிரச்சனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் எமக்கு தெரியப்படுத்த வேண்டும்.

கடற்தொழிலாளர்கள் பிரச்சனையை இரு நாட்டு அரசாங்கமும் பேசி தீர்த்து வைக்க வேண்டும். அதனை விடுத்து அரசாங்கத்தில் உள்ளவர்கள் ஆளுக்கு ஒரு விடயத்தை சொன்னால் நாம் எதனை நம்புவது?

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அறிவிக்க வேண்டும். பிரதமரின் கருத்தா? கடற்தொழில் அமைச்சின் கருத்தா இறுதியானதும், தீர்க்கமானதுமானது என்பதை எமக்கு அறிய தர வேண்டும் என தெரிவித்தார்.

# தமிழ் அரசியற் கட்சிகளை வழிப்படுத்த மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும் – பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு





விடுதலைப் புலிகள் இருந்தவரைக்கும் அவர்களின் அரசியல் துறையே தமிழ்த் தேசியக் கட்சிகளின் வழிகாட்டும் பீடமாக இருந்தது. அவர்கள் எதை முன்மொழிந்தார்களோ அதையே எமது கட்சித் தலைவர்கள் வழிமொழிந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான ஒரு தேசியத் தலைமை இல்லாத நிலையில் தமிழ் அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றும் திக்கொன்றாக அவற்றினது எஜமானர்களின் அல்லது நிதியூட்டு நபர்களின் மனங்கோணாதவாறு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கட்சிகளை வழிப்படுத்த மக்கள் இயக்கமொன்று பலம் பெற வேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டிள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு ஞாயிற்றுக்கிழமை (15.10.2023.) நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆறுகள் ஒரு போதும் பின்னோக்கிப் பாய்வதில்லை. அது போன்றுதான் வரலாறும் பின்னோக்கிப் பாயாது. வரலாறு எங்களை எந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறதோ, அந்த இடத்திலிருந்துதான் வரலாறு தந்த படிப்பினைகளையும் உள்வாங்கிக் கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். ஆனால, இந்தக் கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தயாராக இல்லை.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் முப்பது, நாற்பது வருடங்கள் பின்னால் சென்று அங்கிருந்து போராட நினைக்கிறார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் காலப்பொருத்தமற்று அடிக்கடி அறிவிக்கப்படும் கடையடைப்புப் போராட்டங்கள்.

தமிழ்க்கட்சி ஒன்றின் தலைவர் தாங்கள் ஆயுதங்களைக் கைவிட்டதைப் பிழையென்று தற்போது உணர்வதாக அண்மையில் தெரிவித்திருக்கிறார். ஆயுதங்களைக் கீழே போட்டு ஓடி விட்டு இப்போது கைவிட்டது என்று கூறுவது நகைப்புக்கிடமானது.

ஆயுதம் பற்றிய வெட்டிப் பேச்சை மக்கள் இனியொருபோதும் இரசிக்க மாட்டார்கள். அதற்கு நிகரான வீச்சுடன் மக்களை அணிதிரட்டி காலிமுகத்திடல் அரகலிய போன்று போராட முன்வாருங்கள்.

புகைப்படங்கள் எடுப்பதற்கு முண்டியடித்து முன்னால் நிற்கும் தலைவர்களாக இல்லாமல் சொல்லாலும் செயலாலும் முன்மாதிரியாக உள்ள தலைவர்களின் பின்னால் அணிவகுத்து வருவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தேர்தலை மாத்திரமே இலக்காக கொண்டுள்ள கட்சிகளிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்கியிருக்கிறோம். இந்தக் கையறு நிலையிலேயே வலுவான சிவில் சமூகம் அல்லது மக்கள் இயக்கம் ஒன்றின் அவசியம் உணரப்படுகிறது.

இருக்கின்ற மக்கள் அமைப்புகள் ஒன்றில் அரசியற் கட்சிகளின் பினாமிகளாகச் செயற்படுகின்றன. அல்லது சிவில் சமூகப் பிரதிநிதியாகப் பிரபலம் பெற்று விட்டால் அவரிடம் தேர்தல் ஆசை தொற்றிக் கொள்கிறது. இவற்றுக்கு இடங்கொடாது கட்சிகளின் மூக்கணாங் கயிறாகச் செயற்படக்கூடிய மக்கள் இயக்கமொன்றைக் கட்டியெழுப்ப எமது புத்திஜீவிகள் முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# வடக்கு - கிழக்கில் 20-10-2023 அன்று பூரண ஹர்த்தால்: மன்னாரில் தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து விடுத்துள்ள கோரிக்கை

**- மன்னார் நிருபர் (17-10-2023)**

வெள்ளிக்கிழமை (20) வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள பூரண ஹர்த்தால் மற்றும் கதவடைப்பு போராட்டத்திற்கு மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்புகளும் ஒத்துழைப்பை வழங்குமாறு தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் திங்கட்கிழமை (16) மாலை மன்னாரில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் காரியாலத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டமைப்பு அங்கத்துவ கட்சிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு நீதி சரவணராஜா மீதான அச்சுறுத்தல் மூலம் நீதித்துறை சுயாதீனமாக செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பல்வேறு சம்பவங்கள் இந்த நாட்டில் இடம் பெற்று வருகின்ற போதும் உரிய தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை.

எனவே எதிர்வரும் வெள்ளிக்கிழமை வட கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்பு போராட்டத்திற்கு பொதுமக்கள் வர்த்தக சங்கத்தினர், பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் உட்பட அனைத்து பொது அமைப்புக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் வசந், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பாக மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ், ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் நேசன், ரெலோ கட்சி சார்பாக மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி. மோகன் ராஜ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக முன்னாள் பிரதேச சபை தவிசாளர் முஜா ஹீர், புளொட் சார்பாக ஜேம்ஸ் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரை மையப்படுத்தி வாழ்கின்ற மக்களுடைய வாழ்வாதார நிலைப்பாட்டை குழப்புகின்ற நிலை தோற்றுவிக்கப்படுகிறது

## - மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன்

- மன்னார் நிருபர் (17-10-2023)

மன்னாரை மையப்படுத்தி இங்கு வாழ்கின்ற மக்களுடைய அடிப்படை வாழ்வாதார வாழ்வியல் நிலைப்பாட்டை குழப்புகின்ற நிலைப்பாடு தோற்றுவிக்கப்படுகிறது. எனவே இவற்றை செயற்பாடுகளை முற்றாக எதிர்க்கின்றோம். என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை அபிவிருத்தி பணிகள் குறித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (17) மதியம் மன்னாரில் விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர் பத்திநாதன் குரூஸ் ஆகியோர் இணைந்து கருத்துக்களை முன் வைத்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் 143 காற்றாலைகள் 500 மெகா வேல்ட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அதன் பணிகள் இடம்பெற்று வருகின்றது. ஏற்கனவே மன்னார் மின்சார சபையின் ஏற்பாட்டில் 30 காற்றாலைகள் இயங்குகிறது.

3.45 மெகா வேல்ட் இல் 102.5 மெகா வோல்ட் மின்சாரம் தற்போது உற்பத்தியாகி வருகின்றது. அதன் 2வது கட்டம் 21 காற்றாலைகள் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றது. அதிலும் 3.45 தொடக்கம் 53.45 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கும் அதே போல் முசலி - சிலாபத்துறை யில் இருந்து முள்ளிக்குளம் வரை 34 காற்றாலைகள் அமைக்க உள்ளனர்.

அதிர் 100 மொக வோல்ட் மின்சாரம் மொத்தமாக மின்சார சபைக்கு 250.45 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் அதனுடைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

30 காற்றாலையில் இருந்து மின் உற்பத்திகள் இடம் பெற்று வருகின்றன. தனி யாருடைய மன்னார் நருவிலிக்குளத்தில் 06 காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. 2. 45 மெகா வோல்ட் இல் 15 மெகா வோல்ட் மின்சாரம் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

அதற்கு அப்பால் இந்தியாவினுடைய அனுசரணையில் அதானியினுடைய கம்பனியால் 52 காற்றாலைகள் நிறுவப்பட உள்ளது.



தென்னாசியாவில் ஆகப் பெரிய அளவில் மின் உற்பத்தியை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் 5.5 மெகா வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் ஏறக்குறைய 250 மெகா வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் 52 இடங்கள் அடையாளம் காணப்பட்டு அதனுடைய ஆரம்ப பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதியில் தரைத்தோற்றம் என்பது சாதாரண, ஏனைய நிலப்பகுதியை விட மிகவும் தாழ் நிலமாக காணப்படுகின்றது.

தாழ் நில பிரதேசத்தில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கின்ற போது பலவீனமான பாறை உள் அமைப்புகள் ஏற்படுத்தக்கூடிய நிலை தோற்றுவிக்கப்படும்.

இயற்கை அனர்த்தம் ஏற்படுகின்ற போது மிக மோசமாக இத்தீவு பாதிக்கப்படும். புவிச் சரீ தவியலாளர்கள் எச்சரிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் யுனெஸ்கோவின் அறிக்கையின் படி மன்னார் தீவு அழிகின்ற ஒன்றாக காணப்படுகின்ற மையினால் அதை பாதுகாக்க வேண்டும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மன்னார் தீவில் 3 மாடிகளுக்கு மேல் கட்டிடங்கள் கட்ட இன்று வரை அனுமதி இல்லை. இந்த விவகாரங்களை அடிப்படையாக கொண்டு மன்னார் தீவு பிரதேசத்தில் காற்றாலை தொடர்ந்து அமைக்க கூடாது.

தொடர்கின்ற பணியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், தீவுக்கு வெளியில் அல்லது வேறு பிரதேசத்தில் இந்த காற்றாலைகள் அமைக்க முடியும்.

நிபுணர்களின் கூற்றின் பிரகாரம் மன்னார் தீவுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களிலும் கூட அதனை விட கூடிய அளவு காற்று கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எல்லா விடையங்களிலும் மன்னாரை மையப்படுத்தி இங்கு வாழ்கின்ற மக்களுடைய அடிப்படை வாழ்வாதார வாழ்வியல் நிலைப்பாட்டை குழப்புகின்ற நிலைப்பாடு தோற்றுவிக்கப்படுகிறது.எனவே இவற்றை முற்றாக எதிர்க்கின்றோம்.

இவ் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி, மின்வலு சக்தி அமைச்சர், வடமாகாண ஆளுநர், இந்திய தூதரகம் போன்றவற்றிற்கு கடிதம் எழுதுவதோடு, அவர்களையும் நேரில் சந்தித்து இவ் விடையங்களை எல்லாம் தெளிவு படுத்தி மன்னார் தீவுக்குள் இந்த காற்றாலை அமைக்கும் பணியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்க உள்ளோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் உள்ள மாற்றுதிறனாளிகளை காட்டி வெளிநாட்டில் பணம் வசூலிக்கும் கும்பல்




17.10.2023

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பணம் சேகரிப்பதாக கூறி வெளிநாட்டில் பண சேகரிப்பை பிரித்தானியாவில் இயங்கும் மன்னாரை சேர்ந்த அமைப்பு ஒன்று மேற்கொள்ள உள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பிரித்தானியாவில் வசிக்கும் மக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே மன்னார் வைத்தியசாலைகளுக்கு என வெளிநாடுகளில் கலைநிகழ்வுகள் என்ற பெயரில் விளையாட்டு நிகழ்வுகள் என்ற பெயரிலும் நடைபவனி என்ற பெயரிலும் பல லட்சம் பணம் சேகரிக்கப்பட்ட போதிலும் அவற்றில் சிறிய அளவிலான பணமே வைத்திய சாலைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தாகவும் மிகுதி பணம் தொடர்பில் உரிய பதில் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மன்னாரில் அநேகமான மாற்றுத்திறனாளிகள் அமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்ற நிலையில் சில மாற்றுத்திறனாளிகளை பயன்படுத்தி வருமானம் சேர்க்கும், சொத்துக்களை சேர்க்கும், கும்பலுடன் இணைந்து வெளிநாடுகளில் மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரில் பாரிய பண சேகரிப்பில் குறித்த அமைப்பு ஈடுபட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமது மோசடி நிகழ்வுக்கு வலு சேர்க்கும் வகையில் தங்களுடன் ஒத்துப்போகின்றவர்களையும் வெளி நாட்டிற்கு அழைத்து மோசடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தெரிய வருகின்றது.

குறித்த நிகழ்வு மற்றும் அமைப்புகள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு மன்னாரை சேர்ந்த புலம்பெயர் மக்கள் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

# பாலஸ்தீன மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிரான கண்டனத்தை வெளிப்படுத்த சனிக்கிழமை (21.10.2023) யாழ்ப்பாணம் பேரூந்து நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு அழைப்பு

## ஊடக அறிக்கையிலேயே அதன் இணைச் செயலாளர் த.ஸ்ரீபிரகாஸ் இந்த அழைப்பை விடுத்துள்ளார்

அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பினால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசாங்கத்தினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டுவருகின்றனர். குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம். அத்துடன் காஸா மீதான ஆக்கிரமிப்பு யுத்தமானது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு கொன்றழிக்கப்பட்டதற்கு ஒப்பானதாக பார்க்கப்பட வேண்டியதே. எனவே ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு விடுதலை வேண்டி ஒருமித்து குரல் கொடுப்போம். என சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கை கூறுவதாவது, இஸ்ரேலிய பயங்கரவாத ஆட்சியினர் காஸா மக்களுக்கான உணவு, மருத்துவம், மின்சாரம், தண்ணீர் ஆகிய அடிப்படைத் தேவைகள் சென்றடைவதை தடுத்ததோடு பல கட்டடங்களைத் தரைமட்டமாக்கி மக்களையும் கொன்றொழித்துவருகின்றனர். எல்லா ஒடுக்குமுறைப் போர்களிலும் குழந்தைகளின் உடலங்களே உலக மக்களின் மனச்சாட்சியை உலுக்குவதாக அமைந்து விடுவது போல காஸா குழந்தைகள் பூக்களாகவும், பிஞ்சுகளாகவும் கருகிக்கிடப்பது தாங்கமுடியாத மனவேதனையைத் தருகின்றது. இந்த அனுபவங்களைத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் சுமந்தனர்.

உலக வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, பிருத்தானியா போன்றன இஸ்ரேலின் காஸா மக்கள் மீதான இன அழிப்புக்கு உடந்தையாக இருப்பதோடு ஏனைய நாடுகள் இந்த அழிப்பை தடுத்து விடக் கூடாது என்பதற்காக கடலிலும் தரையிலும் பாதுகாப்பு அரண்களாக யுத்தக் கப்பல்களையும் தமது படைகளையும் நிலைநிறுத்தியுள்ளன. இதில் அவர்களின் அரசியல் பொருளாதார அதிகார நலன்கள் இருக்கின்றது. காஸா மக்களுக்கு எதிரான இந்த தாக்குதலை வேடிக்கை பார்த்து நிற்கும் அரபு நாடுகளும் ஏனைய நாடுகளும் தமது பொருளாதார நலனையும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு தமது அடிமை விசுவாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறார்கள்.

உக்ரேன், ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்கு எதிராய் கண்டனங்களை வெளிப்படுத்தி நின்ற ஜக்கிய நாடுகள் சபை இங்கு அனுதாபங்களை மட்டுமே வெளிப்படுத்தி தனது பக்கச் சார்பை நிரூபித்து நிற்கின்றது. பாதுகாப்பான சுதந்திரமான பலஸ்தீன நாடு அமைவதை உலகின் பெரும்பாலான நாடுகள் குறிப்பிட்டு வருவது போன்று அந்த மக்களின் இறையாண்மைக்காகவும் சுதந்திர உரிமைக்காகவும் பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுப்பதற்கு எதிர்வரும் சனிக்கிழமை (21.10.2023) 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்று கூடுமாறு வேண்டுகின்றோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலை நடவடிக்கைகளை இன்று புறக்கணியுங்கள் — பெற்றோர்கள் மாணவர்களிடம் தமிழ் கட்சிகள் வேண்டுகோள்!

பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் வெள்ளிக்கிழமை (20) புறக்கணிக்குமாறு தமிழ் கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

இது தொடர்பில் தமிழ் கட்சிகள் அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தி குறிப்பில், இன்று நிகழவுள்ள பொது முடக்கம் முழுமையாக வெற்றியீட்டுவதை உறுதிப்படுத்துவது நம் எல்லோருடைய கடமை ஆகும்.

எனவே, பாடசாலைப் பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு, கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். யதார்த்த பூர்வமான முடிவு எடுக்கப்படும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

எது எப்படி இருந்தாலும், பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் இன்று புறக்கணிக்குமாறு எமது மாணவச் செல்வங்களை உரிமையோடு வேண்டிக் கொள்கின்றோம். பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

இன்று நிச்சயிக்கப்பட்டுள்ள பரீட்சையை, வேறு ஒரு தினத்தில் கல்வித் திணைக்களம் தாராளமாக நடாத்த முடியும். எமது ஒத்துழைப்பும் அதற்கு இருக்கும் - என்றுள்ளது.

# பலஸ்தீன இஸ்ரேல் யுத்தமும் ஈழத்தமிழர்களும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போரின் பின்னணியில் சமூக ஊடகங்களில் தமிழர்கள் முன்வைக்கும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், பெரும்பாலானவர்கள் பாலஸ்தீனத்தின் பக்கம் தான் நிற்கிறார்கள். ஒடுக்கப்படும் மக்கள் என்ற அடிப்படையில் பலஸ்தீனத்தை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடுதான் அநேகரிடம் உண்டு. அதுதான் தர்மமும் கூட. நீதிக்காகப் போராடும் தமிழர்கள் ஏனைய போராட்டங்களின் நீதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1980 களின் தொடக்கத்தில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய பின்னணியில், பலஸ்தீனத்தில் சில தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தாயகத்தில் “பிஎல்ஓ ரெய்னிஸ்” என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களின் சிலர் விடுதலைப் புலிகள் அல்லாத வேறு இயக்கங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்திருக்கிறார்கள். அவர்களில் பலர் இப்பொழுதும் உயிரோடு இருக்கிறார்கள். ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த ஆரம்ப காலகட்டங்களில் பாலஸ்தீனம் தமிழ் மக்களின் நட்பு சக்தியாக இருந்தது. அந்நாட்களில் பேராசிரியர் நுகுமான் தொகுத்த பாலஸ்தீனக் கவிதைகள் என்ற தொகுப்பு தமிழ்ப் போராளிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் அந்நூல் பல இளம் கவிஞர்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது. அக்காலகட்டத்தில் இஸ்ரேல் இலங்கை அரசாங்கத்திற்கு போர்த் தளவாடங்களை வழங்கியது. அது கெடுபிடிப் போர்க்காலகட்டம்.

1992 இல் இரஸ்ரேலிய உளவு நிறுவனமாகிய மொசாட்டின் உளவாளிகளில் ஒருவரான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி என்பவர் ஒரு நூலை வெளியிட்டார். By Way of Deception: The Making and Unmaking of a Mossad Officer எனப்படும் அந்த நூல் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. அந்த நூலை வெளியிட்ட பின் விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கனடாவில் தஞ்சமடைந்து விட்டார். அந்த நூலானது மொசாட் எவ்வாறு இலங்கை தீவில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும் உதவிகளை புரிந்தது என்ற தகவல்களை வெளிப்படுத்தியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் ஒரே மைதானத்தின் இரு வேறு பகுதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது பற்றிய விபரங்கள் அந்நூலில் உண்டு. இந்த நூலை விடுதலைப் புலிகள் இயக்கம் வஞ்சகத்தின் வழியில் என்ற தலைப்பில் மொழிபெயர்த்து தனது போராளிகளுக்கு விநியோகித்ததாகவும் ஒரு ஞாபகம்.

அந்த நூல் இலங்கை அரசு படைகளை, அரசாங்கத்தை அவமதிக்கிறது என்று கூறி அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாச விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முற்பட்டதாகவும் ஒரு ஞாபகம்.

இந்நூல் வெளிவந்த அடுத்தாண்டு, 1993இல் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் விளைவாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின்படி பலஸ்தீனர்களுக்கு ஒரு தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இக்கட்டமைப்பு இலங்கைத்தீவில் மஹிந்த ராஜபக்‘வுக்கு அதிகம் நட்பாக காணப்பட்டது. தொடக்க காலத்தில் இருந்தே ராஜபக்ஷ பாலஸ்தீனத்தின் நண்பனாக இருந்து வருகிறார். பாலஸ்தீன - சிறீலங்கா சகோதரத்துவ அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் அவர். 2014 ஆம் ஆண்டு அவர் பலஸ்தீன அதிகார சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். அங்கே அவருக்கு அந்நாட்டின் அதி உயர் விருது ஆகிய “Star of Palestine” - பலஸ்தீன நட்சத்திரம் விருது வழங்கப்பட்டது. அங்குள்ள ஒரு வீதிக்கு மகிந்தவின் பெயர் சூட்டப்பட்டது. தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்த பின் ராஜபக்சவுக்கு எதிராக ஐநாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட ஒரு பின்னணிக்குள்தான், பலஸ்தீனம் மேற்கண்டவாறு மஹிந்தவை கௌரவித்தது.

இப்படியாக 1980 களின் தொடக்கத்தில் ஈழப் போருக்கு ஆதரவாக காணப்பட்ட பலஸ்தீனம் இரண்டு தசாப்தங்களின் பின் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தவர் என்று தமிழ் மக்களால் குற்றம் சாட்டப்படும் ஒருவருக்கு அதி உயர் விருதை கொடுக்கக் காண்கிறோம். அதே சமயம் எண்பதுகளின் பிற்கூறில் ஈழப் போராளிகளுக்கு பயிற்சி வழங்கிய இஸ்ரேல் அதற்கு முன்னரும் பின்னரும் இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாகப் போர்த் தளபாடங்களை விநியோகித்து வந்தது.

இப்படிப்பட்டதோர் வரலாற்றுப் பின்னணியில், இப்பொழுது வெடித்திருக்கும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போரில் தமிழ் மக்கள் எப்படிப்பட்டதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?

தர்மத்தின் அடிப்படையில் சொன்னால், போராடும் தேசிய இனம் என்ற அடிப்படையில் சொன்னால், பாலஸ்தீனத்தைத்தான் ஆதரிக்க வேண்டும். காசாவில் இப்பொழுது என்ன நடக்கின்றதோ அது தான் வன்னி கிழக்கிலும் நடந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான அரபு நாடுகள் உண்டு. ஆனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக வெளிப்படையாக எந்த ஒரு நாடும் அன்றைக்கு குரல் கொடுக்கவில்லை. தமிழ்மக்கள் தனித்துவிடப்பட்டிருந்தார்கள். ஏறக்குறைய முழு உலகத்தாலும் சுற்றிவளைக்கப்பட்டிருந்த ஒரு நிலை. பலஸ்தீனர்களுக்கு உணவு, மருந்து, தார்மீக ஆதரவு போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரபு நாடுகள் உண்டு. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு யார் இருந்தார்கள்?

அதேசமயம் இஸ்ரேலுக்கு அதன் தொட்டப்பாக்களாகிய மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து தார்மீக ஆதரவையும் ஆயுத தளபாடங்களையும் வழங்கி வருகின்றன. குறிப்பாக ஆசிய வட்டகைக்குள் இந்தியா போர் தொடங்கிய உடனேயே இஸ்ரேலுக்கு தன் ஆதரவை தெரிவித்துவிட்டது.

இப்பொழுது மேற்சொன்னவற்றை தொகுத்துப் பார்க்கலாம். ஒரு காலம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக காணப்பட்ட பலஸ்தீனம் பின்னாளில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிஉயர் விருதை வழங்கியது. அதே சமயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களை விநியோகித்த இஸ்ரேல் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பயிற்சிகளை வழங்கியதாக விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கூறுகிறார்.

இப்பொழுது இஸ்ரேலை ஆதரிக்கும் மேற்கு நாடுகள் ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் இது விடயத்தில் ஈழத் தமிழர்கள் யாருடைய பக்கம் நிற்க வேண்டும்?

தர்மத்தின் அடிப்படையில் சொன்னால் பலஸ்தீனத்தின் பக்கம்தான். ராஜதந்திரத்தின் அடிப்படையில் பார்த்தால் என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?

முதலில் அரசியலில் தர்மம் சார்ந்த நிலைப்பாடுகள் உண்டா என்று பார்க்கலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை அறம், தர்மம், நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல், ராணுவ, பொருளாதார நலன்சார்ந்த அருவருப்பான பேரம் மட்டும்தான் உண்டு.

முதலில் யூதர்களை எடுத்துக் கொள்வோம். உலகின் மிக மூத்த டயஸ்போரா யூத டையஸ்போராதான். சுமார் இரண்டு ஆயிரம் ஆண்டு கால புலப்பெயர்ச்சி அது. அதனால் உலகில் அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட ஆசியர்களாக அவர்கள் மாறினார்கள். கடந்த நூற்றாண்டில் யூதர்கள் ஐரோப்பாவெங்கும் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இரண்டாம் உலகமகா யுத்தச் சூழலில் சுமார் 6 மில்லியன் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த இனப்படுகொலையின் குழந்தைதான் இஸ்ரேல். இன்னொரு விதமாகச் சொன்னால் யூதப் புலப்பெயர்ச்சியின் குழந்தையே இஸ்ரேல். ஆனால் ஓர் இனப்படுகொலையின் விளைவாக உருவாகிய யூததேசம் அந்த இனப்படுகொலையில் இருந்து கற்றுக்கொண்டது எதனை? உலகில் அதிகம் இனப்படுகொலைக்கு உள்ளாகிய ஒரு மக்கள் கூட்டம் சிறிய பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்கின்றது. உலகின் மிகப்பெரிய இனப்படுகொலையில் இருந்து யூதர்கள் கற்றுக் கொள்ளாத அறத்தை, தர்மத்தை, நீதியை வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்கலாம்?

ஜனநாயகம் மனித உரிமைகள் போன்றவற்றை அரசியல் உபகரணங்களாக பயன்படுத்தும் மேற்கத்திய நாடுகள்தான் இஸ்ரேலின் தொட்டப்பாக்கள். பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்யும் யூதர்களை ஆதரிக்கும் மேற்படி நாடுகள்தான், ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தீர்மானங்களைக் கொண்டு வருகின்றன. எனவே இங்கு தர்மம் ஒரு அளவுகோல் அல்ல. அது போலவே கியூபா ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் தான் நிற்கின்றது. அது போராடி வென்ற ஒரு நாடு. ஆனால் போராடும்

தமிழ் மக்களின் பக்கம் அது நிக்கவில்லை. உலகில் எந்த ஒரு நாடும் அது சிறியதோ அல்லது பெரியதோ தனது நலன் சார்ந்த முடிவுகளைத்தான் எடுக்கும். நலன்சார்ந்த உறவுகளைத்தான் வைத்துக் கொள்ளும். அறம் சார்ந்து அல்ல.

அரசுடைய தரப்புக்களே அவ்வாறு முடிவு எடுக்கும் பொழுது அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய தமிழர்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்?

நீதிமான்களிடம் தான் ஈழத்தமிழர்கள் நீதியை கேட்கலாம் என்றால் உலகில் எங்கேயும் நீதியை கேட்க முடியாது.தேவராஜ்யத்திடம்தான் கேட்கலாம். அல்லது மறைந்த மலையக தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டைமானை போல யாகம் செய்யலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை பூமி தர்மத்தின் அச்சில் சுற்றவில்லை. அது முழுக்க முழுக்க நலன்களின் அச்சில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால் ஈழத் தமிழர்கள் இப்பொழுது என்ன நிலைப்பாட்டை எடுப்பது?

ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய ஆன்மீகவாதியும் எழுத்தாளரும் அறிஞரும் ஆகிய மு.தளையசிங்கம் ஒரு வார்த்தையை பயன்படுத்துவார். அதுதான் “சத்திய தந்திரம்”. மு.தளையசிங்கம் ஈழப்போரின் முன்னோடி இலக்கியவாதிகளில் ஒருவர். அவர் எழுதிய “ஒரு தனி வீடு” நாவல் ஒரு தனி நாட்டுக்கான போராட்டத்தை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தியது என்று அவருடைய ஆன்மீக நண்பர்கள் கூறுவார்கள். சத்திய தந்திரம் என்றால் என்ன? மகாபாரதத்தில் கிருஷ்ணர் செய்வது அதைத்தான். பாரதப்போரில் பாண்டவர்கள் வென்றது புஜபலத்தால் அல்லது ஆயுத பலத்தால் அல்லது படை பலத்தால் மட்டும் அல்ல. பெருமளவுக்கு கிருஷ்ணருடைய புத்தி பலத்தால்தான். மகாபாரதத்தை வேறு வார்த்தைகளில் சொன்னால் கிருஷ்ண தந்திரம் எனலாம். அதைத்தான் தளையசிங்கம் சத்திய தந்திரம் என்று சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் இதயமாக இருக்கும் அறத்தைக் கைவிடாமல், உலக ஒழுங்குக்கு ஏற்ப நெளிவு சுழிவோடு நடந்து கொள்வது என்றால் அதுதான் ஒரே வழி. அதை கிறிஸ்துவின் வார்த்தைகளில் சொன்னால் “இதயத்தில் புறாக்களைப்போல் கபடம் இல்லாமலும் செயலில் பாம்புகளைப் போல் தந்திரமாகவும்” நடந்து கொள்வது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News



# உள்நாட்டில் தமிழர்க்கு நீதி கிட்டாது என்பதை வெளிப்படுத்துவதற்கே ஹர்த்தால் - அச்சுவேலியில் நிரோஷ்

ஹர்த்தாலின் வாயிலாக தமிழ் மக்களுக்கு எதிரான இன ரீதியிலான ஒடுக்கு முறைகளுக்கு உள்நாட்டு நீதிப்பொறிமுறை தீர்வாகாது என்ற யதார்த்தம் வெளிப்படுத்தப்படும் என்பதனால் அதனை சோபையிழக்க செய்வதற்கு பல்வேறு முயற்சிகளை அரசாங்கம் எடுக்கின்றது என ரெலோவின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

18-10-2023 அன்று அச்சுவேலி ஹர்த்தாலுக்கான தெருவோர மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும், அச்சுவேலியில் கர்த்தாலை எதிர்த்து தனிநபர் போராட்டத்தை ஒருவர் நடத்துகின்றார். அவரை தான் அச்சுவேலியில் நாம் முதன்முதலில் காண்கின்றோம். அரசு உள்நாட்டு நீதிபரிபாலனத்தின் வாயிலாக தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கு தீர்வை வழங்க முடியும் என்று கூறி சர்வதேசத்திடமிருந்து தப்பிக்க முயற்சிக்கின்றது. இந் நிலையில் நாட்டில் நீதித்துறை சுதந்திரமற்றுள்ளது என்ற உண்மைச் செய்தியைச் சொல்வதற்கு குருந்தூர் மலை விவகாரத்தில் பணியாற்றி அச்சுறுத்தல் காரணமாக பதவியையே விட்டு வெளியேறியுள்ள நீதிபதியின் நிலைமை சிறந்த உதாரணமாகும். எமது இனத்திற்கு உள்நாட்டு பொறிமுறைகள் எதுவும் தீர்வைத்தராது என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்கு இச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்த வேண்டும். அவ் வகையில் ஏனைய ஹர்த்தால்களைக் காட்டிலும் நீதித்துறையின் சுதந்திரத்தினை மையப்படுத்திய இக் ஹர்த்தால் முக்கியத்துவமுடையது. வெளிநாட்டு ஜனநாயக சக்திகளை திரும்பிப் பார்க்க வைப்பதற்கானது.

இதனால் எப்படியாவது இந்த ஹர்த்தாலை சோபையிழக்க வைக்கவேண்டும் என அரசதரப்பு செயற்படுகின்றது. அரச இயந்திரம் ஹர்த்தாலை சோபையிழக்க வைக்க கடுமையான முயற்சிகளை எடுக்கும். இந் நிலையில் தமிழ் மக்கள் விழிப்புடன் செயற்பட்டு ஹர்த்தாலினை வெற்றியடையச் செய்ய வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் டெலோவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.





# வியாபாரிகளை இராணுவம் பொலிஸ் புலனாய்வுத்துறை மிரட்டியதாக செல்வம் அடைக்கலநாதன் – MP குற்றச்சாட்டு

(19-10-2023)

இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வு துறையினர் வியாபாரிகளை மிரட்டுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி கேட்டு இடம்பெறவுள்ள பூரண கதவடைப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 20 ஆம் திகதி பூரண கதவடைப்பு அனுஸ்டிக்குமாறு கோருகின்றோம். எங்களுடைய மக்கள் போராட்டத்தின் ஊடாக முன்னுக்கு வந்தவர்கள்.

போராட்டத்தின் குணாதிசயங்களை கொண்டவர்கள். இருந்தாலும் நீதித்துறை, நில அபகரிப்பு, புத்த கோவில்கள் உடைய ஆக்கிரமிப்பு என்பன வடக்கு - கிழக்கில் மிக மோசமாக நடந்து வருகின்றது.

எங்களது மக்களின் பூர்வீகம் மற்றும் அவர்களின் நிலங்களை அபகரிப்பதன் ஊடாக எங்களுடைய மக்களின் வரலாற்றை சிதைக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்தும் வகையில் இந்த கர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

எமது மக்கள் போராட்டத்தின் ஊடாக வந்தவர்கள் ஆகையால் இதற்கு ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம். இருந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றது.

அன்றாடம் உழைக்கும் மக்கள் தமது அன்றைய தேவைக்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி எழுகிறது. தற்போது புதிதாக அடாவடித்தனமான, ஜனநாயக விரோதமான செயற்பாடு நடக்கிறது.

இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வு துறையினர் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், சிறு தொழில் செய்வோர், மரக்கறி வியாபாரம் செய்வோர் என அவர்களை மிரட்டி அவர்களை பூரண கதவடைப்புக்கு ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கூறி வருகிறார்கள்.

அதற்கு எமது கண்டனத்தை தெரிவிக்கிறேன். அனைத்து தமிழ் பேசும் மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள். அரசாங்கம் கூடுதலான திணைக்களங்கள் மற்றும் பிக்குகளை வைத்து எமது மக்களை அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கிறது.

தொடர்ந்தும் ஹர்த்தாலை நடத்த முடியாது. இது ஒரு கடைசியான கர்த்தால். அதனால் அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்தார்.

# நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் "மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகள் துயரம்" கருத்தரங்கிற்கு தமிழ்நாடு அரசின் அனுமதி மறுப்பு, ஜனநாயகப் பண்பற்ற நடவடிக்கை

## இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் அவலநிலையை தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள் விவாதிப்பதற்கான அரசியல் வெளியை மறுப்பது பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கான உரிமைகளை மீறுகிறது

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ்நாட்டு உறுப்பினர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த "இலங்கைத்தீவில் மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகள்துயரம்" எனத் தலைப்பிடப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்தரங்கிற்கு தமிழ்நாடு அரசின் அனுமதி மறுப்பை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கண்டிக்கிறது. இந்த ஜனநாயகப் பண்பற்றசெயலானது, பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகிய உரிமைகளையும் மீறுகிறது. மகாத்மா காந்தி குறிப்பிட்டது போன்று. "மனிதன் ஒருவனது சுதந்திரத்திற்கு, சுவாசிப்பதற்கு ஒக்சிசனைப் போன்று, பேச்சுச்சுதந்திரம் அத்தியாவசியமானது".

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் காலனித்துவநாடாக இருந்த ஐக்கிய இராச்சியம், இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்களை இலங்கைத் தீவில் முதலில் கோப்பித் தோட்டங்களிலும், பின்னர் தேயிலைத் தோட்டங்களிலும் வேலை செய்வதற்குகொண்டு வந்தபோது அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென உறுதியளித்தது. 1948 ஆம் ஆண்டு முதல், சுதந்திரத்தைத் தொடர்ந்து உடனடியாக சிறீலங்கா அரசாங்கமானது 1948 சிலோன் குடியுரிமைச் சட்டம், 1949 இந்திய பாகிஸ்தானிய வசிப்பிட குடியுரிமைச் சட்டம், 1949 சிலோன் பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம் மூலம் 10 மில்லியன் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி ஐக்கிய இராச்சியம் மலையகத் தமிழர்களுக்கு கொடுத்த உறுதிமொழியை இலங்கை புறந்தள்ளியது. 1958, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் மலையகத் தமிழர்கள் இனப்படுகொலைகளுக்கு உள்ளாகியதுடன், இனவன்முறையின் இலக்காகக் காணப்பட்டனர். இன்றை வரைக்கும் இலங்கைத் தீவில் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற வருமானத்தை அளிக்கும் தொழிற்துறையாகவுள்ள இலங்கைத் தீவில் தேயிலைத்தொழிற்துறையின் முதுகெலும்பாகவுள்ள இலங்கைத் தீவிலுள்ள மலையகத் தமிழர்களின் சமூகப்பொருளாதார மற்றும் வசிப்பிட நிலைகள் மனித நிலைக்கு கீழ்ப்பட்டவையாக உள்ளன.

இலங்கைத் தீவிலுள்ள மலையகத் தமிழர்களின் வாழ்வுகளை உயர்த்துவதற்கான வழிகள் மற்றும் வழிவகைகளை விவாதிப்பதையே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்தரங்கு நோக்காகக்கொண்டிருந்தது. கருத்தரங்கானது ஓய்வுபெற்ற தமிழ்நாடு நீதிபதி அரி பரந்தாமனால் தலைமை தாங்கப்படவிருந்தது. உறுதிப்படுத்தப்பட்ட பேச்சாளர்களில், அனைத்திந்திய மக்கள் சிவில் உரிமைகள் சங்கத்தின் செயலாளர் எஸ். சுரேஷ், திரைப்பட இயக்குநர் திரு. கோபிநயினார், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செனட் சபை உறுப்பினர் பேராசிரியர் சரஸ்வதி, தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு. எஸ்.எஸ். பாலாஜி, கொங்கு இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு. உ. தனியரசு (முன்னாள் எம்.எல்.ஏ), சிரேஷ்ட வழக்கறிஞர், சென்னை உயர் நீதிமன்றம் திரு. சங்கரசுப்பு, தமிழ் வழக்கறிஞர் சங்கத்தின் வழக்கறிஞர் டி.எம். ஜான்சன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ் நாட்டு உறுப்பினர்கள், ஏனைய தமிழ் நாட்டைத் தளமாகக் கொண்டபேச்சாளர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உள்ளரங்க கருத்தரங்கிற்கு அனுமதி மறுத்தமை தொடர்பாக தமிழ்நாடு பொலிஸ் அதிகாரிகள், எழுத்தில் ஒன்றைரை மாதங்களுக்கு முன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிய அனுமதியின் மறுப்புக்கான எவ்வித காரணத்தையும் இன்றுவரை தெரிவித்திருக்கவில்லை.

ஜனநாயக ஆட்சியின் அச்சு சட்டவாட்சி. கருத்தரங்கின் மீதான தடையானது, பேச்சுச்சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரத்தின் பாரியமீறலொன்றாகும். தவிர, இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் அவலநிலையை விவாதிக்க மற்றும் அவர்களுக்கு உதவும் வழிகளை ஆராய்வதற்கான தமிழ் நாட்டிலுள்ள 60 மில்லியன் தமிழர்களின் அரசியல் வெளியையும் இது மறுக்கிறது.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீடிப்பு தொடர்புடைய சட்டநடவடிக்கைகளில் 2019 ஆம் ஆண்டில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், துதமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடையானது இந்தியாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றதென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வாதிட்டிருந்தது. இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டின் அடிப்படையில், இந்தியாவில் அரசியல் செயற்பாடுகளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஈடுபடுவதில் எவ்வித சட்டரீதியான தடையுமில்லையென தீர்ப்பாயம் குறிப்பிட்டிருந்தது.

"மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகள் துயரம்" கருத்தரங்கு மீதான தமிழ்நாடு அரசின் அனுமதிமறுப்பை, இந்திய நீதித்துறையில் சட்ட ரீதியாக சவாலுக்குட்படுத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ்நாடு உறுப்பினர்கள், த. தமிழினியன், த. முகேஷ், கோ. பாவேந்தன், பேராசிரியர் சரஸ்வதி ஆகியோர்மேற்கொண்டுள்ளனர்.



தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

விஸ்வநாதன் உருத்திரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இனவழிப்புக்கு ஆளாகும் பாலஸ்தீனிய மக்களுடன் மனதளவிலாவது தமிழ்மக்கள் துணைநிற்க வேண்டும் - பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

காசாப் பகுதியிலிருந்து ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டு பெரும் எண்ணிக்கையிலான இறப்புகளுக்கு வழிவகுத்ததையடுத்து இஸ்ரேல் காசாவின் மீது கொடூரமான யுத்தமொன்றை ஆரம்பித்திருக்கிறது. மக்கள் குடியிருப்புகள், மருத்துவமனைகள் என்று பாராது தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை வீசி காசா முழுவதையுமே துடைத்தழிக்கும் நோக்கில் இஸ்ரேல் மூர்க்கத்தனமாகத் தாக்கி வருகிறது. இந்த யுத்தம் ஹமாஸ் இயக்கத்தினரைச் சாட்டாக வைத்து பாலஸ்தீனியர்களைக் கருவறுக்கும் இனவழிப்பு யுத்தம் ஆகும். இந்நேரத்தில், இலங்கையில் இனவழிப்புக்குத் தொடர்ச்சியாக முகங்கொடுத்துவரும் ஈழத்தமிழ் மக்கள் இனவழிப்புக்கு ஆளாகும் பாலஸ்தீனிய மக்களுடன் மனதளவிலாவது துணைநிற்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் நிகழ்த்திவரும் தாக்குதல் தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசா நிலப்பரப்பை இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டு பலவந்தமாக ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அங்கு வாழும் பாலஸ்தீனியர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். காசா வெறும் 365 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. உலகின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதியாக விளங்கும் இங்கு 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் பாதிப்பேர் 18 வயதுக்குட்பட்ட இளயதலை முறையினராவர். இலங்கை அரசு முள்ளிவாய்க்கால் என்னும் குறுகிய நிலப்பரப்பில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைத் திட்டமிட்டுச் சிக்கவைத்து அவர்களைக் கொத்துக்குண்டுகள் வீசி அழித்தொழித்ததைப் போன்றே இன்று மிகக்குறுகிய காசா நிலத்துண்டில் பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் கொன்று குவித்து வருகிறது.



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் ஜனநாயக வழிமுறைகளிலிருந்து ஆயுதப் போராட்டமாகப் பரிணாமித்தபோது தமிழ் விடுதலை இயக்கங்களில் பலர் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளிடம் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதைத் தங்களின் பெருமையாகவும் வலிமையாகவும் சிலாகித்தவர்கள் இன்றும் எம்மத்தியில் உள்ளனர். பாலஸ்தீனியர்களிடமிருந்து ஆயுதப் பயிற்சி பெற்றதை நாம் எவ்வாறு மறக்கவியலாதோ, அதே போன்று இஸ்ரேலின் மொசாட் உளவுப்பிரிவினரின் ஆலோசனையின்பேரில் தமிழ் மக்களை இலங்கை அரசு தாக்கி அழித்ததையும் நாம் மறந்துவிடலாகாது. ஒடுக்கப்பட்ட பாலஸ்தீனிய மக்களுக்காக நாம் குறைந்த பட்சம் தற்போது அனுதாபங்களையாவது வெளிப்படுத்தாதுவிடின் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் மயப்படுத்தியே போராட்டங்களை தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கவேண்டும் — சரவணபவன்




தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தங்கள் வாக்கு அரசியலுக்காக போராட்டங்களை முன்னெடுக்கக் கூடாது. மக்கள் மயப்படுத்திய போராட்டங்களையே முன்னெடுக்கவேண்டும். எதிர்காலத்தில் பொது அமைப்புக்கள் உள்பட அனைத்துத் தரப்புக்களுடன் கலந்தாலோசித்து முழு அடைப்புப் போராட்டங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் அறிவிக்கவேண்டும்.

எப்படியிருப்பினும் இம்முறை முழு அடைப்பின் நோக்கங்கள் வெற்றியடைய வேண்டுமானால் நாளை ஒரு நாள் பொதுமக்கள் தங்கள் இயல்பு வாழ்வை முடக்கவேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்மாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, நாளைய முழு அடைப்புப் போராட்டம் இரண்டு காரணங்களுக்காக நடத்தப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடுவில் தமிழ் மக்களின் மேய்ச்சல் தரவைகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்து இருக்கின்றார்கள். அந்த மேய்ச்சல் தரவையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான மாடுகளை வெட்டிக் கொன்றிருக்கின்றார்கள். சிங்களவர்களை வெளியேற்றவேண்டும் என தமிழ் மக்கள் தொடர்ச்சியாக போராடுகின்றார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, சிங்கள மக்களை சட்டநடவடிக்கை ஊடாக அங்கிருந்து வெளியேற்றுமாறு அதிகாரிகளைப் பணிக்கின்றார். ஆனால் தமிழ் மக்கள் என்றால் சட்டத்துக்கு முரணாக, இயற்கை நீதிக்கு மாறாக வெளியேற்றுவார்கள்.

சிங்கள மக்கள் என்றதும் சட்டத்துக்கு உட்பட்டு அதுவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமாம். இதுதான் இந்த நாட்டில் பிரயோகிக்கப்படும் இருவேறு சட்டநடைமுறைகள்.

அடுத்தது எமது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியைத்துறந்து வெளியேறியிருக்கின்றார். குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அவருக்கு அச்சுறுத்தல் இல்லை என்று கூறுகின்றது. நீதியமைச்சர் விஜயதாஸவோ, அவரது பதவி விலகலை ஏற்கவில்லை. அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லை என்று நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளதாகக் கூறுகின்றார். அப்படி உயிர் அச்சுறுத்தல் இருந்தால் அவர் பிடியாணை பிறப்பித்து சம்மந்தப்பட்ட சந்தேகநபரைக் கைது செய்திருக்க முடியும் என்று குறிப்பிடுகின்றார்.

நீதிபதியின் கட்டளையை மீறி விகாரை அமைக்கப்படுகின்றது. நீதிமன்றத்தின் கட்டளையை மீறி அமைக்கப்படும் விகாரைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொலிஸார், விகாரை அமைப்பவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்றனர். இலங்கையில் சட்டத்தை இயற்றும் நாடாளுமன்றத்தில் நீதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு இரு தடவைகள் பகிரங்க எச்சரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் விடுகின்றார்.

இவை எவையும் அவருக்கான அச்சுறுத்தல்களாக இருக்கவில்லையா? இவையனைத்தும் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை கக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதச் சிந்தனையில் ஊறிய ஆட்சியாளர்களின் வெளிப்பாடு. அத்தகைய போக்கை நாம் அனுமதிக்க முடியாது. அது எமது இருப்பை கறையான் புற்றுப்போல அழித்து ஒரு நாள் முழுவதையும் சுரண்டிவிடும்.

இதற்கு எதிராக எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிக்காட்ட வேண்டும். அதற்காகவே முழு அடைப்புப் போராட்டம் நாளை இடம்பெறப்போகின்றது. தமிழ் மக்களாக - தமிழ் பேசும் மக்களாக இந்த நாட்டின் சிங்கள பேரினவாதத்தால் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இனங்களாக ஒன்றாக - ஒரே குடையில் திரண்டு முழு அடைப்பை வெற்றியடையச் செய்ய ஒத்துழைக்கவேண்டும்.

முழு அடைப்புக்கான முடிவை எடுத்துவிட்டு சிவில் அமைப்புக்கள் உள்பட ஏனைய தரப்புக்களும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சு நடத்தியது தவறு. சிவில் அமைப்புக்கள் உள்பட சகல தரப்புகளையும் உள்ளீர்த்து குறிப்பாக முழு அடைப்பால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும் தரப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களையும் உள்வாங்கி முழு அடைப்பு தொடர்பில் தீர்மானம் எடுத்திருக்கலாம்.

முக்கியமாக பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சை நடக்கின்றது. ஆலயங்களில் நவராத்தி நடக்கின்றது. இந்த முழு அடைப்பால் அவையும் நாளை நிறுத்தப்படப்போகின்றன. இது தொடர்பில் முற்கூட்டியே அந்தத் தரப்புக்களுடன் கலந்து பேசியிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் இது தொடர்பில் சலசலப்பு வந்திருக்காது.

இம்முறை தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குகின்ற ஊடகங்களும் கூட முழு அடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கவில்லை. அவர்கள் முழு அடைப்பு தொடர்பான செய்திகளைப் பிரசுரிக்கின்றன. ஆனால் பத்திரிகைகள் தங்கள் கருத்தியலாக இந்த முழு அடைப்புப் போராட்டத்தை கேள்விக்கு உட்படுத்தியுள்ளன. அவர்கள் முன்வைக்கின்ற காரணங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முழு அடைப்புப் போராட்டத்தை அறிவித்த தமிழ்த் தேசியத் தரப்புக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தென்னிந்திய நடிகர் விஜயின் திரைப்படம் வெளியாகியிருக்கின்றது. எங்களது இளைஞர்கள் சினிமாக்கள் பார்ப்பதை தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் ஆணிவேரே இளைஞர்கள்தான். அவர்கள் நாளைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு குந்தகம் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நாளை முழு அடைப்புப் போராட்டம் இந்தச் சினிமாவால் - திரைப்படத்தால் குழம்பிய என்ற செய்தி தென்னிலங்கைக்குச் செல்லுமாக இருந்தால், அதைப்போன்ற மிக மோசமான - பெரிய பின்னடைவான தருணம் வேறு எதுவும் இருக்காது. பௌத்த - சிங்கள பேரினவாதச் சிந்தனையில் ஊறிய ஆட்சியாளர்களுக்கு, இளைஞர்கள் தாங்கள் இன்னமும் உரிமை போராட்டத்தின் பங்குதாரர்களாகவே இருக்கின்றோம் என்பதை உணர்த்த இன்றைய முழு அடைப்புப் போராட்டத்தை வெற்றியடையச்செய்யவேண்டும்.

தற்போது எமது மண்ணில் தென்னிலங்கையை அடித்தளமாகக் கொண்ட பல்தேசிய நிறுவனங்கள் உள்பட பல நிறுவனங்கள் கால் பதித்துள்ளன. அவை எமது போராட்டங்களையோ, தமிழ் மக்களின் நினைவுநாள்களையோ எதனையும் கவனத்தில் கொள்வதில்லை. அந்த நிறுவனங்களில் பணிபுரிவதும் எமது இளைஞர்கள்தான். அந்த நிறுவனத்தின் வாடிக்கையாளர்களும் தமிழர்கள்தான். தமிழர்களிடமிருந்து சுரண்டவேண்டும். ஆனால் தமிழ் மக்களின் உரிமைகள் மிதிக்கப்படுவது அவர்கள் துணைபோவார்கள். அவர்களையும் கடந்த காலத்தைப்போன்று எமது வழிக்கு கொண்டு வரவேண்டும், என்றார்.

# வவுனியாவில் ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவுதினம் அனுஸ்டிப்பு

(19-10-2023)


படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23 ஆவது நினைவுதினம் வவுனியா ஊடக அமையத்தில் 19-10-2023 அன்று மாலை அனுஸ்டிக்கப்பட்டது.

வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப. கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதலாவது ஈகை சுடரினை சிரேஷ்ட ஊடகவியலாளர் கி. வசந்தரூபன் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நிமலராஜனின் உருவப்படத்திற்கு ஏனைய ஊடகவியலாளர்கள் நினைவுச்சுடரை ஏற்றியதுடன் மலரஞ்சலியினையும் செலுத்தினர்.

அவர் தொடர்பான நினைவுப் பேருரையினை ஊடகவியலாளர் இ. சற்சொரூபன் நிகழ்த்தியிருந்தார். அவர் தனது உரையில்,

இலங்கையில் தமிழ் ஊடவியலாளர்கள் தொடர்ச்சியாக அடக்கு முறைக்கு உள்ளாகும் நிலமை நீடித்து வருகின்றது. அத்துடன் நிமலராஜன் உட்பட படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களிற்கான நீதி பல வருடங்களாக மறுக்கப்பட்டு வருகின்றது. அந்த கொலைகள் தொடர்பாக எவ்வித உள்நாட்டு விசாரணைகளோ அல்லது சர்வதேச விசாரணையோ இடம்பெறாமல் இருக்கின்றமையையிட்டு நாம் கவலையடைக்கின்றோம்.



இந்நிலையில் ஊடக சுதந்திரத்தினை பாதுகாப்பதுடன், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களிற்கான நீதியை பெற்றுக்கொடுப்பதில் உரியதரப்புக்கள் கரிசனையுடன் செயற்ப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# 'உதயன் பல்சுவைக் கலைவிழா - 2023' மண்டபம் நிறைந்த விருந்தினர்கள் பார்வையாளர்களோ சிறப்பாக நடைபெற்றது

கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ நகரில் உள்ள ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'உதயன் பல்சுவைக் கலைவிழா - 2023' மண்டபம் நிறைந்த விருந்தினர்கள் பார்வையாளர்களோ சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் பிரதம விருந்தினராக சுவிற்சலாந்து வாழ் எழுத்தாளர் கல்லாறு சதீஸ் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். நிகழ்ச்சித் தொகுப்பாளராக மதிசயன் பணியாற்றினார். வரவேற்புரையை உதயன் குழுமத்தின் நீண்ட நாள் நண்பர் பாஸ்டர் சோதி நிகழ்த்தினார்.

நடனங்கள் கவிதா நிகழ்வு உரைகள் என தொடர்ச்சியாக மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன. கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான 'ஆரோசை' குழுவினர் வழங்கிய இனிய மெல்லிசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில் சிறப்புப் பாடகராக தமிழகத் திரைத்துறைப் பாடகர் வி.எம். மகாலிங்கம் மேடையை சிறப்பாக நகர்த்திச் சென்றார். அவரோடு உள்ளூர்ப் பாடக பாடகிகள் பெருமளிவில் ரசிகர்களை மகிழ்வித்தனர்.

மேற்படி உதயன் பலசுவைக் கலைவிழாவில் 3 சமூக சேவையாளர்களுக்கு 'உதயன் சமூக சேவை விருது - 2023' என்னும் கௌரவம் வழங்கப்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் என பல அரசியல் தலைவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

உதயன் பிரதம ஆசிரியருக்குரிய கௌரவங்களை பல்வேறு தரப்பினர் வழங்கினர். கலை நிகழ்ச்சிகளை வழங்கியவர்கள் மேடையில் கௌரவிக்கப்பெற்றனர்.

*- சத்தியன் -*


























Latika Productions
லதிகாவின்
SAINDHAVI & UNNI MENON
LIVE IN CONCERT
21st OCTOBER | CANADA EVENT CENTRE, WHITBY
TICKETS
From $30 I VVIP $300
GATES OPEN
5.00 PM
A R Reihana
Saindhavi
Ramya Nambisan
Unni Menon
Vijay
Kiki
Anu Anand
Sridhar sena
Aravind
Madhan Band
TICKET BOOKINGS OPEN NOW
tickets.rescounts.com
Latika Gold House
Contact: 647-996-5922 /416 423 7555
2900 Markham Rd Unit L7, Scarborough, ON M1X 1E6
Sponsorship Opportunity Available
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.


tasty தமிழா
TM
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


தமிழ் மிரர்
Tamil Mirror
Awards Gala 2023.
NOVEMBER
5
SUNDAY
4.00 PM
18
YEARS
ANNIVERSARY
CELEBRATION
DSN
The Golden Voice
T. Ramalingam
Motivational Speaker
Tamil Nadu
Deshan Styler
South African Music Sensation
Chinese Cultural Centre 5183 Sheppard Ave East Call: 416-697-0126




# "அறிவை விதைத்தவர். பங்காரு அடிகளார்" என இரங்கல் தெரிவித்துள்ள பாரதப் பிரதமர் மோடி



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் நிறுவுனர் பங்காரு அடிகளார் மாரடைப்பால் நேற்று வியாழக்கிழமை காலமான நிலையில், அவரது மறைவுக்கு பிரதமர் மோடி, ஆளுநர் ரவி, மத்திய அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். செங்கல்பட்டு மேல் மருவத்தூரில் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தை நிறுவிய, அதற்குத் தலைவராகவும் இருந்தவர் பங்காரு அடிகளார். உலகெங்கும் அவர் பக்தர்களைக் கொண்டிருந்த நிலையில், அவரது அருள் வாக்கு ஏழை மக்கள் பலருக்கும் நம்பிக்கையாகவும் பலம்மிக்கதாகவும் அவர்களின் வாழ்வியலோடு கலந்து பயணிக்கின்றது.

அவரது பக்தர்கள் அன்பாக ''அம்மா'' என்றே அவரை அழைப்பார்கள். ஆன்மீகம் மட்டுமின்றி பல மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகள் எனப் பல கவ்வி நிறுவனங்களும் ஆதிபராசக்தி சித்தர் பீடம் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் கருவறையில் பெண்களைப் பூஜை செய்யலாம், மாதவிடாய் நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் பெண்கள் வழிபடலாம் எனப் பல ஆன்மீகத்தில் புரட்சிகளைச் செய்தவர். இதற்கிடையே உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பங்காரு அடிகளார், திடீரென நேற்று வியாழக்கிழமை மாரடைப்பால் காலமானார். அவரது மறைவு பக்தர்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அவரது உடல் இப்போது அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு ஊர்களில் இருந்தும் பக்தர்கள் மேல்மருவத்தூரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், பங்காரு அடிகளாரின் உடலைப் பார்க்கும் பக்தர்கள் கதறி அழுகிறார்கள். பங்காரு அடிகளாருக்கு நாளை இறுதிச் சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேல் மருவத்தூர் பங்காரு அடிகளார் மறைவுக்கு பல்வேறு அரசியல்வாதிகள், தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

பங்காரு அடிகளாரின் மறைவு குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ''ஸ்ரீ பங்காரு அடிகளார் ஐயா அவர்களின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. ஆன்மிகமும் கருணையும் நிறைந்த அவரது வாழ்க்கை என்றென்றும் பலருக்கு வழிகாட்டும் வெளிச்சமாக இருக்கும். மனித குலத்திற்கான தனது அயராத சேவை மற்றும் கல்விக்கான முக்கியத்துவத்தின் மூலம், அவர் பலரின் வாழ்க்கையில் நம்பிக்கை மற்றும் அறிவை விதைத்தார். அவரது பணி பல தலைமுறைகளுக்கு ஊக்கமளித்து வழிகாட்டும். அவரது குடும்பத்தினருக்கும் அபிமானிகளுக்கும் இரங்கல்கள். ஓம் சாந்தி'' என்று பதிவிட்டுள்ளார். அதன்படி தமிழ்நாடு ஆளுநர் ரவி வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், ''“அம்மா“ பங்காரு அடிகளாரின் மறைவால் வருத்தமடைந்தேன். பண்பட்ட ஆன்மா ரூ சிறந்த ஆன்மிக குரு அவர். கல்வி, சுகாதாரம், சமூக சீர்திருத்தங்களுக்கான அவரது பங்களிப்புகள் என்றும் நம்மை ஊக்குவிக்கும். அவரது குடும்பத்தினருக்கும் பக்தர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள். ஓம் சாந்தி!'' என்று தெரிவித்துள்ளார். அமித் ஷா: இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ''மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தின் தலைவர் பத்மஸ்ரீ பங்காரு அடிகளார் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. அடிகளார் ஆன்மீக நுண்ணறிவுகளுக்காக நன்கு அறியப்பட்டவர், அவரது ஆன்மீகம், சடங்கு நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று. இந்த துயரமான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் பக்தர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தமிழில் தனது இறங்கலைப் பதிவிட்டுள்ளார். ஜே பி நட்டா: அதேபோல ஜே பி நட்டாவும் தனது எக்ஸ் பக்கத்தில் இரங்கலைப் பதிவிட்டுள்ளார். இது தொடர்பாக நட்டா தனது எக்ஸ் பக்கத்தில், ''மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தை நிறுவிய பத்மஸ்ரீ பங்காரு அடிகளார் காலமானார் என்பதை அறிந்து வேதனை அடைந்தேன். அவரது எளிமை மற்றும் அவரது சேவை என்றென்றும் நினைவுகூரப்படும். இதன் காரணமாகவே அவரது பக்தர்கள் அவரை அம்மா என்று அன்புடன் அழைத்தனர். இந்த துயரமான நேரத்தில் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வேதனையைத் தாங்கும் சக்தியை எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்குத் தரப் பிரார்த்தனை செய்கிறேன். ஓம் சாந்தி'' எனப் பதிவிட்டுள்ளார்.

# இந்தியா செல்ல உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்கும்படி டக்ளஸ் அறிவுரை

- நடராசா லோகதயாளன்



இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமான முறையில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களது அத்துமீறலை தடுத்து நிறுத்தும் வகையில் இந்தியாவிற்கு செல்லும் பேச்சுவார்த்தை குழுவின் பயணச் செலவிற்காக உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியதற்கமைய பருத்தித்துறை பகுதியில் வீதிகளில் உண்டியல மூலம் நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களது எல்லைதாண்டிய அத்துமீறல் காரமாக வடபகுதி மீனவர்களது வாழ்வாதாரம் முற்றிலுமாக பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்தும் முயற்சிகள் எவையும் வெற்றிபெறாத நிலையில் வடக்கு கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தியாவிற்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதாக அண்மையில் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த பேச்சுவார்த்தை குழுவின் பயணச் செலவிற்காக உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கூறியுள்ளேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார்.

இதற்கமைய தற்போது பருத்தித்துறை முனை பகுதியில் உண்டியல் மூலம் நிதி சேகரிக்கும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு பகுதியில் உள்ள சில மீனவர் சங்கங்களின் பிரதிநிகள் ஒன்று சேர்ந்து குறித்த நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். "இந்திய இழுவைப் படகுகள், எல்லை தாண்டி, சட்டவிரோதமாக எமது கடற்பரப்பிற்குள் நுழைந்து தொழில் செய்வதை தடுப்பதற்காக இந்தியா சென்று தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள், கடற்றொழில் வளம் சம்பந்தப்பட்ட பிரமுகர்கள், கடற்றொழில் சங்க பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த வடக்கு கடற்றொழில் சம்மேளனம், சமாசங்கள் தீர்மானித்துள்ளன. அதற்கான பயணச் செலவுக்காக நிதி சேகரிக்கின்றோம்.

இதற்கு தங்களினால் ஆன உதவிகளை வழங்கி உதவுமாறு கோருகின்றோம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட உண்டியலினை ஏந்தி குறித்த நிதி சேகரிப்பை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கீரிமலையில் நில அபகரிப்புகள் குறித்து கவலையும் கண்டனமும் அதிகரிப்பு

- நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணம் கீரிமலையில் சைவ அடையாளங்கள் மக்கள் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு மகிந்த ராஜபக்சவினால் அடாத்தாக கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகையினை கோட்டபாய நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க இன்றைய ஜனாதிபதி ரணில் அரசில் நொதேன் யுனி என்னும் தனியார் பல்கலைக் கழக முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் பலரும் கண்டணம் தெரிவிக்கின்றனர்.

கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் ஜே/226 இலக்க கிராம சேவகர் பிரிவில் சைவ அடையாளங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலத்தில் அமைத்த ஜனாதிபதி மாளிகைப் பிரதேசம் உள்ளிட்ட 29 ஏக்கர் நிலம் உரிமையாளர்களின் சம்மதம் இன்றி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதாக 2021-09-09 அன்று அப்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சாவினால் இரகசியமாக வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது.

இவ்வாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான 29 ஏக்கர் நிலத்தில் இருந்து 12 ஏக்கர் நிலம் தற்போது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஊடாக நொதேன் யுனி என்னும் தனியார் பல்கலைக் கழக முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுவிட்டது.

50 வருட குத்தகைக்கு அண்ணளவாக 5 ஆயிரம் பில்லியன் ரூபாய்கள். முதலீட்டில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு திங்கட்கிழமை (16) பத்தரமுல்லயில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தலைமையில் இடம்பெற்றுள்ளது. இதில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, தலைவர் இண்டி பத்மநாதன் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் எல். ரத்நாயக்க உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

தனியார் பல்கலைக் கழகம் என்றபெயரில் வழங்கப்படும் முதலீட்டிற்கு மக்களின் நிலத்தை அபகரித்து வழங்குகின்றமை தொடர்பில் அந்த நில உரிமையாளர்களுடன் அப்பகுதியில் அமைந்திருந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவ ஆலயங்களின் தர்ம கர்த்தாக்களும் தமது கடும் கண்டனத்தை பதிவு செய்வதோடு இது சர்வதேச நியமங்களிற்கும் முரணானது என்றவகையில் சர்வதேசமும் இது தொடர்பில் தமது கரிசணையை செலுத்த வேண்டும் என்கின்றனர்.

ஏனெனில் வரலாற்று சரித்திரம் மிக்க 7 சைவ (ஆலய) அடையாளங்களை அழித்தே அன்று 29 ஏக்கரில் ஆடம்பர மாளிகை அமைத்தனர். மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களை இடித்து அழித்து அந்த இடத்திலேயே ஜனாதிபதிக்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்ட விடயம் அண்மையிலேயே தெரியவந்தது. இதில் கீரிமலையில் மிகப் பழமை வாய்ந்த சிவன் ஆலயம், சடையம்மா மடம், கதிர்காமத்திற்கு யாத்திரை ஆரம்பிக்கும் முருகன் ஆலயம் என்பன அமைந்திருந்த இடங்கள் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டே மகிந்த தனக்கு ஆடம்பர மாளிகை அமைத்தார் எனப் பலரும் குற்றம் சாட்டியபோதும் அன்று அதனை ஆவண ரீதியில் நிரூபணம் செய்ய முடியாமல் போனது. ஆனால் தற்போது அது நிரூபணம் செய்து வெளிவந்துள்ளது.

வலி. வடக்கு கீரிமலை பகுதியில் இருந்த சிவன் ஆலயம் அருகே கிருஸ்ணன் ஆலயம் ஒன்றும் இருந்தது. இந்த ஆலயத்தின் ஆலய நிர்வாகத்தினர் சிலர் மார்ச் மாதம் 2 ஆம் திகதி கடற்படையினரின் பாதுகாப்பு வலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டு கிருஸ்ணர் ஆலயத்தின் தற்போதைய நிலையைக் காண்பித்துள்ளனர்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகத்தினர் 1990 ஆம் ஆண்டின் பிற்பாடு, முதல் தடவையாக இந்த ஆலயத்தைச் சென்று பார்வையிட்டனர். ஆலயத்தைச் சென்று பார்வையிட்ட ஆலய பரிபாலனசபையினருடன் அப்பகுதி கிராம சேவகரும் பயணித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் ஆலயம் இருந்த தடயமே தெரியாது இடித்து அடியோடு அழிக்கப்பட்டே மகிந்த ராஜபக்சவின் காலத்தில் உல்லாச விடுதி அமைத்துள்ளனர் என அங்கு சென்று திரும்பிய கிருஸ்ணர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கதிரவேலு நாகராசா உறுதி செய்த்தோடு சிவன் கோவிலின் தடயமே இப்போது இல்லை என்று கூறினார்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகம் சென்று வந்த பின்பு அப்பகுதிக்குச் சென்று திரும்பிய அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஆறு .திருமுருகன் தனது கண்டனத்தை பதிவு செய்யும்போது போர்த்துக்கீசர் காலத்து ஆதிசிவன் ஆலயத்தில் பாதாள கங்கை எனப்படும் கிணற்றுடன் கூடிய சிவன் ஆலயம், அதன் அருகே சித்தர்களின் தியான மடம், அதிலே நல்லூர் தேரடிச் சித்தரான சடையம்மாவின் சமாதி மற்றும் அவரது மடம் ஆகியவையும் இருந்தன".

அது மட்டுமின்றி அந்த பிரதேசமே இந்துக்களின் புனித பூமியாக திகழ்ந்ததற்கு ஏராளமான சான்றுகளும் உள்ளன.

"நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் குருவான சங்கர சுப்பையாவின் சமாதி ஆகியவையும் அங்கே இருந்தன. அதேபோன்று மிகவும் பழமையான கதிரை ஆண்டவர் ஆலயமும் இருந்தது. இவ்வாறான ஆண்மீக அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை மீள அமைத்தே ஆக வேண்டும் என்பதோடு அவற்றினை அழித்தமைக்கும் எமது வன்மையான கண்டனங்களையும் நாம் பதிவு செய்கின்றோம்" என்றார்.

இதேநேரம் இப்பகுதியில் அமைந்திருந்த கதிரை ஆண்டவர் ஆலயத்தின் மதகுருவாக இருந்த 71 வயதான கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் கணேசமூர்த்தி சர்மாவை
"கதிரைமலை முருகன் ஆலயத்திற்கு எனது குடும்பத்தில் மூன்றாம் தலைமுறையாக நான் பூசை மேற்கொண்டு வந்தேன். இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியாக வேலே இருந்து வந்தது. பண்டயகால சிற்ப முறையிலே அமைக்கப்பட்ட ஆலயம் இது. அதனோடு குருக்கள் தங்குமிடம், மடப்பள்ளி மட்டுமன்றி 3 கேணிகள் ஒன்றாக காணப்பட்ட வரலாறும் உண்டு. அதேநேரம் இந்த ஆலயம் கடற்கரையோடு ஒட்டியிருந்த போதும் இந்த ஆலயத்திற்கு அப்பால் இருந்த கிணற்று நீரே உவராக இருந்தது. எனினும் ஆலயத்தின் கேணியிலிருந்த நீர் நன்னீராகவே இருந்ததால் அயலவர்களின் பாவனைக்கும் பெரிதும் உதவியது. இந்தப் பிரதேசம் அனைத்து சைவ மரபுகளோடு இருந்தமையால் திருச்செந்தூரை ஒத்த வடிவில் அமைக்க கனவு கண்டோம் அது வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. ஏனெனில் இந்தப் பிரதேசம் மீண்டும் விடுவிக்கப்படுமா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமும் அவை இருக்கின்றனவா இல்லையா என்ற அச்சம் மறுபுறமும் எம்மை சூழ்கின்றது". என்கின்றார்.

இப்பிரதேச நிலத்தை அரசு சுவீகரிக்க முற்பட்டபோதெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம். ஆனால் 38 ஏயின் கீழ் பிரதேச செயலாளர் சுவீகரித்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியதாகவும் அதனை நகர அபிவிருத்தி அதிகார சபை ஓர் முதலீட்டு நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்க ஒப்பந்தம் இடப்பட்டுள்ளதாக தற்போது கூறப்படுகின்றது.

இவ்வாறு சட்ட விரோதமாக வழங்கும் இடம்தொடர்பில் நாம் எமது மக்கள் மற்றும் ஆலய சபைகளின் கோரிக்கையின பெயரில் நீதிமன்றின் ஊடாக தடையை பெறவே முயற்சிக்கின்றோம் என தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI

## Pawn Brokers




30
வருட சேவைகள்

**வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!**

# கனகாம்பிகை

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.**™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198

# கிழக்கு மாகாணத்தில் இனப் போட்டியின் வேர்கள் கடந்த காலங்களைப் போலவே, நிலத்தின் உரிமைக்காக உள்ளது

பி.கே.பாலச்சந்திரன்
டெய்லி மிரர், கொழும்பு,
ஒக்தோபர் 10, 2023

இலங்கையின் கிழக்கு மாகாணம் மீண்டும் இனங்களுக்கிடையிலான போட்டிப் பிரதேசமாக மாறி வருகிறது. இந்த முறை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையேயும், சுற்றுவட்டாரத்தில் முஸ்லிம்களுக்கும் இடையேயும் அதிகம்.
2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவடைந்ததன் பின்னர் மூன்று சமூகங்களுக்கிடையிலான அதிகார சமநிலையில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணமாகும்.
போர் உக்கிரமடைந்திருந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருந்ததுடன், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் காணி தொடர்பாகப் போட்டி நிலவியது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அதிகாரச் சமநிலை சிங்களவர்களுக்கும் சிங்கள மேலாதிக்க அரச இயந்திரத்திற்கும் சாதகமாக மாறியது. போட்டி மீண்டும் நிலத்தின் மீது தொடர்புள்ளது, பொதுவாக, நிலத்திற்கான வரலாற்று உரிமை. தொடர்ச்சியான குடியேற்றங்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தைத் தமிழர்கள் தமது "தாயகமாக" கருதுகின்றனர். காணி மற்றும் சட்டம் ஒழுங்கு விடயங்களில் அதிகாரப் பகிர்வை அவர்கள் கோருகின்றனர். சிங்களவர்கள் இந்த கூற்றுக்களை, வரலாற்று அடிப்படையிலும், தங்கள் "இழந்த" உரிமைகளை மீட்டெடுப்பதற்காக பிராந்திய ரீதியாக விரிவுபடுத்துவதற்கான விருப்பத்தின் அடிப்படையிலும் சவால் விடுகின்றனர். சுதந்திரத்தின் தொடக்க ஆண்டுகளில் சிங்களவர்கள் கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் அனுசரணையுடன் கூடிய குடியேற்றத் திட்டங்கள் ஊடாக காணிகளை உரிமை கோரியிருந்தனர். ஆனால், தற்போது பல்வேறு அரசுத் துறைகள் மூலம் வளர்ச்சி, தொல்லியல், வனப்பாதுகாப்பு ஆகியவற்றுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.
இந்தக் காணிகளில் ஒரு காலத்தில் பௌத்த விகாரைகள் இருந்தன என்ற அடிப்படையில் பௌத்த பிக்குகள் ஆலயங்களுக்கான காணிகளை உரிமை கொண்டாடி களத்தில் குதித்துள்ளனர். சனாதிபதி செயலணியினால் பலப்படுத்தப்பட்டு புத்தசாசன அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொல்பொருள் திணைக்களம் புராதன பௌத்த விகாரைகளை கண்டுபிடிப்பதற்காக அகழ்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. பௌத்த பிக்குகள் காணிகளுக்கு உரிமை கோருவதற்காக விகாரக்களை நிர்மாணித்து வருகின்றனர். அரசும், பௌத்த பிக்குகளும், சிங்களப் பெரும்பான்மையினரும் இதனை ஒரு நியாயமான முயற்சியாகவே பார்க்கின்றனர், ஏனெனில் தீவின் எந்தவொரு பிரதேசத்தையும் எந்தவொரு சமூகமும் பிரத்தியேகமான இனவாதப் பாதுகாப்பாக அடையாளப்படுத்த முடியாது.

தீவில் சிங்களர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தமிழர்கள் நிலம் வாங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு தமிழர்களின் மறுப்புக் குறித்து சிங்களவர்கள் குறிப்பிடுகையில், சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் இந்துக் கோயில்கள் ஏராளமாக உள்ளன.
மறுபுறம், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் நிலங்களை கையகப்படுத்துவதில் ஒரு மோசமான திட்டத்தைத் தமிழர்கள் காண்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை சிறுபான்மையினராக்கும் இறுதி நோக்கத்துடன் இனப் பகிர்வை மாற்றும் நடவடிக்கையே இது. இதன் மூலம் கிழக்கு மாகாணம் தமது "தாயகம்" என்ற தமிழரின் வேட்கையின் அடிமட்டத்தை தகர்த்தெறியும் நடவடிக்கையாகும்.

பல ஆண்டுகளாக கிழக்கு மாவட்டங்களில் தமது விகிதாச்சாரம் எவ்வாறு தேய்பிறைபோல் குறைந்து வருகிறது, சிங்களவர்களின் விகிதாச்சாரம் எவ்வாறு வளர்பிறைபோல் குறைந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதில் தமிழர்கள் ஒருபோதும் சோர்வடைவதில்லை.
ஒட்டுமொத்தத் தீவிலும் அதிகாரத்தை இழக்க நேரிடும் என்று தமிழர்கள் அஞ்சுகின்றனர். நிரந்தர சிறுபான்மை தகைமை இருப்பதால் மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதால் மாகாண சுயாட்சியைக் கேட்கிறார்கள். இலங்கையின் மக்கள் தொகைப் பரவலைக் கருத்தில் கொண்டு அவர்கள் எப்போதும் நாடாளுமன்றத்தில் ஒரு சிறிய சிறுபான்மையினராகவே இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் அமைப்பது தொடர்பான விடயத்தில், கட்டிட நடவடிக்கைகள் இறைபக்தியால் தூண்டப்படவில்லை, மாறாக அரசாங்க திணைக்களங்கள் மற்றும் காவல்துறையின் உதவியுடன் புதிய விகாரைகளைச் சுற்றியுள்ள காணிகளை உரிமை கொண்டாடி கையகப்படுத்தும் நிகழ்ச்சி நிரலால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதே தமிழர்களின் குற்றச்சாட்டாகும்.
பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரைகள் கட்டுவதில் நியாயமில்லை என்று வாதிடும் தமிழர்கள், அதற்கு நேர்மாறாக இந்துக்கள் இல்லாத இடத்தில் இந்துக் கோயில்கள் கட்டப்படுவதில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை ஆதி அய்யனார் ஆலயத்திற்கு அருகில் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் சிங்கள பௌத்தர்கள் விகாரை ஒன்றை நிர்மாணித்ததாக அண்மையில் இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. மற்றும் "அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பிற்காக" இலங்கை இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை. புத்தசாசன அமைச்சின் கீழ் தொல்பொருளியல் திணைக்களம் செயற்படுவதால் இலங்கையின் தொல்பொருளியல் இனரீதியாக நடுநிலை வகிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
சனாதிபதி கோட்டாபய இராசபக்சவினால் அமைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் சான்றுகளைப் பாதுகாப்பதற்கான சனாதிபதி செயலணியில் பௌத்தர்கள் அல்லாதவர்கள் எவரும் இல்லை என்பதுடன் பாதுகாப்பு அமைச்சின் கீழ் அது கொண்டுவரப்பட்டது.
செயலணி அமைக்கப்பட்ட மூன்று ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளியில் சிங்களவர்கள் சனத்தொகையில் சுமார் ஒரு விழுக்காட்டினர்களாக இருந்த கிராமங்களில் குறைந்தது 23 புதிய பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பௌத்த பிக்குகள் தொல்பொருளியல் அகழ்வுகளை மேற்கொள்ள உத்தரவிடவோ அல்லது மேற்கொள்ளவோ கூடாது என்றும், அதனைத் தொல்பொருளியல் திணைக்களத்திடம் விட்டுவிடுமாறும் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடை விதித்துள்ளார். ஆனால் முன்னர் சுட்டிக்காட்டியவாறு தொல்பொருளியல் திணைக்களம் புத்தசாசன அமைச்சின் கீழ் உள்ளது.

அமைதி மற்றும் நீதிக்கான தேவாலய ஆணையத்தின் அருட்தந்தை இராசன் உரோஹனின் கூற்றுப்படி, பௌத்த பிக்குகள் அரச காணிகள் அல்லது மத நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்குள் நுழைந்து ஆக்கிரமிப்பாளர்களை அச்சுறுத்தி, அவர்களின் சொத்துக்களில் இருந்து வெளியேற்றி புதிய எல்லைகளை அமைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வரலாற்று ரீதியாக கிழக்கு மாகாணத்தில் காணிகள் இன அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அருட்தந்தை உரோஹான் தெரிவித்துள்ளார். காணிகள் தமிழ், முஸ்லிம் அல்லது சிங்களவர் என இனங்காணப்பட்டு அதற்கேற்ப ஒதுக்கப்படுகின்றன.
வரலாற்றுச் சான்றுகளை சிங்களவர்களும் தமிழர்களும் இடங்களின் மீது முரண்பாடான கூற்றுக்களை முன்வைக்கப் பயன்படுத்துகின்றனர்.
தமிழர்கள் முதன்முதலில் இலங்கையில் எப்போது குடியேறினர் என்பது தெரியவில்லை, ஆனால் கிமு முதலாம் நூற்றாண்டு முதல் கிபி 13 ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்திய படையெடுப்புகள் தமிழ் புலப்பெயர்வுக்கு வழிவகுத்தன என்று புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

11 மற்றும் 12 ஆம் நூற்றாண்டுகளில், கிழக்கு மாகாணத்தின் மேல் பாதியில் கோகிலா சந்தேசத்தின் படி முக்கார ஹதானா என்று ஒரு பெரிய தமிழ் சமூகம் இருந்தது.
கிழக்கு மாகாணத்தில் உள்ள சைவ ஆலயங்கள் மிகவும் தொன்மையானவை என தமிழர்கள் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, திருகோணமலை கோணேஸ்வரம் கோயில் கிமு 1580 முதல் கிமு 205 வரையான காலத்தைச் சேர்ந்தது.
மறுபுறம், திருகோணமலை உண்மையில் பண்டைய சிங்கள துறைமுகமான கோகர்ணா என்று சிங்களவர்கள் கூறுகின்றனர்.
ஒரு ஆதாரத்தின்படி, கோகர்ண திருக்கோணமலைக்கு (திருகோணமலை) மாற்றப்பட்டது முதன்முதலில் கி.பி 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு தமிழ் கல்வெட்டில் காணப்படுகிறது. ஸ்ரீ கோகர்ண விகாரை என்றழைக்கப்படும் கோகர்ணாவில் உள்ள பௌத்த விகாரை மன்னர் மகாசேனன் (கி.பி. 276-303) காலத்தில் கட்டப்பட்டது.
எவ்வாறெனினும், சிங்களவர்கள் மாத்திரமே பௌத்தர்களாக இருக்க முடியும், அனைத்து பௌத்த தொல்பொருள் எச்சங்களும் சிங்களத் தொடர்பைக் குறிக்கின்றன என்று கூறுவது தவறானது என்று பல புகழ்பெற்ற அறிஞர்கள் கூறுகின்றனர்.

தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 400-650) பௌத்தம் செழித்திருந்தது என்று முனைவர் நிர்மலா சந்திரகாசன் நினைவு கூர்கிறார். கி.பி 7 ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்திற்கு வருகை செய்த சீனத் துறவி அறிஞர் "ஹவான் சாங், அதன் மக்கள்தொகையில் பெரும்பாலோர் பௌத்தர்கள் என்றும், சுமார் 100 மடாலயங்கள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த துறவிகள் உட்பட ஆயிரக்கணக்கான துறவிகள் இருப்பதாகவும் கூறுகிறார்.
புகழ்பெற்ற நாலந்தா பௌத்த பல்கலைக்கழகத்தின் முகவரான தர்மபாலரின் சொந்த நகரமும் காஞ்சிபுரம் ஆகும். பிற்காலச் சோழர் ஆட்சி செய்த காலம் 9 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை. இந்தக் காலப் பகுதியில் தமிழ்நாட்டில் பவுத்தம் வழக்கத்தில் இருந்தது.

13 ஆம் நூற்றாண்டில், இலங்கையில் பௌத்த மதத்தை புதுப்பிக்க சோழ (தமிழ்) நாட்டிலிருந்து துறவிகள் மற்றும் சாத்திரங்களை தம்பதேனியாவின் மன்னர் பராக்கிரமபாகு வரைவழைத்தார் என்று மகாவம்சம் குறிப்பிடுகிறது. இந்தத் துறவிகளில் முக்கியமானவர் ஸ்ரீமேவன் காலத்திலிருந்து அவரது காலம் வரை மகாவம்சத்தின் தொடர்ச்சியை எழுதிய தர்மகீர்த்தி ஆவார்.

அவ்வாறு இலங்கைக்கு வந்த கற்றறிந்த தமிழ் பௌத்த பிக்குகளில் வணக்கத்திற்குரிய புத்தகோச, வணக்கத்திற்குரிய தர்மபாலர் ஆகியோரும் அடங்குவர். அனுராதபுரம் மகாவிஹாரத்தில் வாழ்ந்த அவர்கள் விசுதிமக்க போன்ற படைப்புகளை எழுதினர்.
எவ்வாறெனினும், இந்த ஒத்திசைவான கடந்த காலம் சிங்கள பௌத்தர்களாலும் தமிழ் இந்துக்களாலும் மறக்கப்பட்டுள்ளது அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசியல் சூழலில், இரு சமூகங்களையும் சேர்ந்த மதவெறியர்கள் தங்களைப் பிணைக்கும் பொதுவான கூறுகளை விடத் தங்கள் இன மற்றும் மத தனித்துவத்தை வலியுறுத்த விரும்புகிறார்கள்.
இதன் நோக்கம் வெளிப்புற சேரிகளை நிறுவுவது அல்லது இன மற்றும் மத மேலாதிக்கத்தை நிறுவுவது ஆகும்.
உலகில் சிங்களவர்களவர்களைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரே இடம் இலங்கைத் தீவு என்பதால், சிங்களவர்களிடையே ஒரு பகுதியில் தமிழர் ஒருங்கிணைவது குறித்த அச்சம் பிரிவினை அச்சத்தைத் தூண்டுகிறது.
ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை தமது பாரம்பரிய நிலங்களை இழப்பதும், அங்கு அவர்களின் விகிதாச்சாரம் நீர்த்துப்போகச் செய்வதும் அவர்கள் தமது தாயகம் என்று சட்டரீதியாக அழைக்கக்கூடிய ஒரு இடத்தை மறுப்பதற்குச் சமமாகும்.
இரண்டையும் இணைக்கக்கூடிய ஒரு பரந்த அரசியல் மற்றும் தார்மீக தலைமை இல்லாத நிலையில் இந்த மோதல் தீர்க்க முடியாததாகத் தெரிகிறது.
(தமிழாக்கம்: கனடா நக்கீரன்)



# பங்காரு அடிகளாருக்கு அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வு: தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

இந்திய செய்திகள்



மறைந்த மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆன்மிக குரு பங்காரு அடிகளாரின் இறுதி நிகழ்வு அரசு மரியாதையுடன் நடைபெறும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பு: “மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டுக்கும் மேலாக மிகச் சிறப்பாக நடத்தி, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவைகளையும் மக்களுக்கு வழங்கி வந்தார். அம்மா என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட பங்காரு அடிகளார், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் பெண்களே கருவறைக்குள் சென்று வழிபாடுகள் நடத்தும் புரட்சிகரமான நடைமுறைகளை வழக்கப்படுத்தினார்.

கோயில் கருவறைக்குள் அனைத்துச் சாதியினரும் சென்று அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதற்காக தி.மு.கழகம் பல ஆண்டுகளாகப் போராடி, அதனை நடைமுறைப்படுத்தியும் வரும் நிலையில், அனைத்துப் பெண்களையும் கருவறைக்குள் சென்று அவர்களே பூசை செய்து வழிபடச் செய்த பங்காரு அடிகளாரின் ஆன்மிகப் புரட்சி, மிகவும் மதித்துப் போற்றத்தக்கது. அவரது ஆன்மிக மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி கடந்த 2019ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் “நம்மைக் காக்கும் 48” திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக மேல்மருவத்தூர் சென்றிருந்த போது, உடல்நலிவுற்றிருந்த பங்காரு அடிகளாரை நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்து வந்தேன். உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வந்த அடிகளார் அவர் தற்போது மறைவுற்றிருப்பது, அவரது பக்தர்களுக்கு ஒரு பேரிழப்பாகும். பங்காரு அடிகளாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். பங்காரு அடிகளாரின் சேவைகளைப் போற்றும் வகையில், அரசு மரியாதையுடன் அவரது இறுதி நிகழ்வு நடைபெறும்” என்று தெரிவித்துள்ளார்.

# சாதிவாரி கணக்கெடுப்பை விரைவாக நடத்த தமிழக அரசு முன்வர வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்



”சமூகநீதி மண் என்று போற்றப்படும் தமிழகத்தில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாவிட்டால், சமூக, பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் பின்தங்கி விடும். எனவே, தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை விரைவாக நடத்த தமிழக அரசு முன்வர வேண்டும்.

அதற்கான கால அட்டவணையை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும்“ என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஆந்திரத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு வரும் நவம்பர் 15ம் தேதி முதல் தொடங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்திருக்கிறது. அதுமட்டுமின்றி, சாதிவாரி கணக்கெடுப்பின் மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள சாதிகளை அடையாளம் கண்டு அவர்களின் முன்னேற்றத்துக்கான சமூகநீதித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

கர்நாடகம், பிஹார், ஒடிசா ஆகிய மாநிலங்களைத் தொடர்ந்து சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் ஆந்திர அரசின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது.இந்தியாவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு இதுவரை முன்வரவில்லை என்ற போதிலும், சமூகநீதியில் அக்கறை கொண்ட மாநிலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தி வருகின்றன. ராஜஸ்தான் போன்ற சில மாநிலங்கள் விரைவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்போவதாக அறிவித்துள்ளன. ஆக்கப்பூர்வமான வகையில் மாறிவரும் சமூகநீதிச் சூழலில், எந்த ஒரு மாநிலமும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தாமல் இருக்க முடியாது என்பது உறுதியாகி விட்டது. அதனால், தங்கள் மாநிலங்களில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுமா? என்ற எதிர்பார்ப்பு பெரும்பாலான மாநிலங்களில், குறிப்பாக தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது.

சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவதில் தமிழக அரசு இரட்டை நிலைப்பாட்டையே எடுத்து வருகிறது. தேசிய அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தேசிய அரங்குகளில் வலியுறுத்தி வரும் திமுக, அடுத்தக்கட்டத்தை நோக்கி நகர மறுக்கிறது. அதேநேரத்தில், தேசிய அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும்; இல்லாவிட்டால் ஆந்திரத்தில் மாநில அரசே கணக்கெடுப்பு நடத்தும் என்று ஆந்திர சட்டப்பேரவையில் 11.04.2023 ஆம் நாள் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய ஜெகன்மோகன் ரெட்டி அரசு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 6 மாதங்களாகியும் மத்திய அரசிடமிருந்து எந்த பதிலும் வராத நிலையில், மாநில அளவில் கணக்கெடுப்பு நடத்த தயாராகிவிட்டது. ஆனால், தமிழக அரசோ, அத்தகைய தீர்மானத்தைக் கூட சட்டப்பேரவையில் நிறைவேற்ற தயங்கிக் கொண்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள சமுதாயங்களில், 30 ஆயிரத்துக்கும் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட அனைத்துச் சாதிகளுக்கும், தனித்தனியாக நலவாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த நிறுவனங்களுக்கு நிதி அதிகாரம் அளிக்கப்பட்டு இருப்பதால், ஒவ்வொரு சமூகத்துக்கும் தேவையான நலத்திட்ட உதவிகள், முதியோர் ஓய்வூதியம், கல்விக்கட்டணம், தொழில் தொடங்கக் கடனுதவி, மருத்துவ உதவிகள் ஆகியவற்றை அந்தந்த வாரியங்களே வழங்குகின்றன. அதேபோன்ற வாரியங்களை தமிழகத்திலும் தொடங்க வேண்டும் என்று கடந்த 4 ஆண்டுகளாக பாமக வலியுறுத்தி வருகிறது. ஆனால், முன்பு ஆண்ட கட்சியும், இப்போது ஆளும் கட்சியும் இந்த கோரிக்கையை நிறைவேற்ற மறுக்கின்றன.சமூகநீதி மண் என்று போற்றப்படும் தமிழகத்தில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாவிட்டால், சமூக, பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் பின் தங்கி விடும். எனவே, தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை விரைவாக நடத்த தமிழக அரசு முன்வர வேண்டும். அதற்கான கால அட்டவணையை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும்“, என்று அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

# இஸ்ரேலில் இருந்து இதுவரை 147 பேர் தமிழகம் வருகை: மாநில அரசு தகவல்

இஸ்ரேலில் இருந்து இதுவரை 121 பேர் தமிழக அரசின் செலவிலும், 26 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் என 147 பேர் தமிழகம் வந்தடைந்துள்ளனர் என்று தமிழக அரசின் அயலகத் தமிழர் நலத் துறை தெரிவித்துள்ளது.இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இஸ்ரேல் பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்த நிலையில், தமிழக முதல்வரின் ஆணைக்கிணங்க தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட உதவி எண்கள் மூலம் அங்கு சிக்கித் தவித்த 158 தமிழர்களின் தகவல்கள் அறியப்பட்டது.

இவர்களுடன் தமிழக அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் மூலம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் தேவைகள் கண்டறியபட்டது. அதன் அடிப்படையில் , இதுவரை நான்கு கட்டங்களாக புது டெல்லி வந்த 98 தமிழர்கள் அவர்களது இல்லம் வரை, தமிழக அரசின் சார்பில் அழைத்து வரப்பட்டனர்.இந்நிலையில் நேற்று (அக்.17) நள்ளிரவு இஸ்ரேலில் இருந்து ஆபரேஷன் அஜய் முலம் புதுடெல்லி வந்தடைந்த 23 தமிழர்கள் தமிழக அரசினால் வரவேற்கப்பட்டு, விமான பயணச்சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டது, கோயம்புத்தூர் விமான நிலையம் வந்த 4 நபர்களை தமிழக அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றம் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு அரசின் செலவில் ஏற்பாடு செய்த வாகனங்களில் அனுப்பி வைத்தார்.

மேலும் சென்னை விமான நிலையம் வந்த 17 நபர்களை மக்களவை உறுப்பினர் கலாநிதி வீராசாமி, அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ், மற்றும் துறை அலுவலர்கள் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர். அதே போன்று மதுரை விமான நிலையம் வந்த 2 நபர்கள் மாவட்ட நிர்வாகத்தால் வரவேற்கப்பட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு அரசு செலவில் அனுப்பி வைத்தனர்.இதுவரை, இந்நேர்வில் இஸ்ரேலில் இருந்து 121 பேர் தமிழக அரசின் செலவிலும், 26 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் தமிழகம் வந்தடைந்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் போட்டியிட்டால் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்த்து களம் காணுவேன்: சேலத்தில் சீமான் அறிவிப்பு

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சேலத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். அதேபோல, இலங்கைராணுவம் தமிழக மீனவர்களைத்தாக்குவது உள்ளிட்ட அத்துமீறல்களில் ஈடுபடுகிறது. ஆனால், மத்திய, மாநில அரசுகள் இவற்றைத் தட்டிக்கேட்பதில்லை. தமிழர்கள் தாக்கப்படுவதையும், அவமானப் படுத்தப்படுவதையும் சகித்துக் கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டனர்.தமிழகத்தில் நாம் தமிழர் கட்சிஆட்சி அமைக்கும்போது, மீனவர்கள் மீது கைவைக்க முடியாது. மக்களவையில் அதிக எம்.பி.க்களை வைத்திருக்கும் திமுக, இந்த விவகாரத்தில் கடிதம்மட்டுமே எழுதுகிறது. நான் முதல்வர் நாற்காலியில் அமர்ந்த பின்னர், தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டால், முதல்வர் பதவியில் இருந்து விலகிவிடுவேன்.

காவிரியில் தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் கட்சியைக் கண்டித்து, கூட்டணியில் இருந்து திமுக விலகியிருக்க வேண்டும். தமிழக மக்கள் தேசிய அரசியலைத்தான் விரும்புகிறார்கள் என்று பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். அவர் நிறையபடிக்க வேண்டும். பல தேசியங்களின் ஒன்றியம்தான் இந்தியா என்பதை உணர வேண்டும்.


தமிழகத்தில் திமுக, அதிமுகமாறி மாறி ஆட்சிக்கு வருகின்றன. நாம் தமிழர் கட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை வர வேண்டும். இதற்காகத்தான் நாங்கள் பாடுபட்டு வருகிறோம். தமிழகத்தில் பிரதமர் நரேந்திர மோடி போட்டியிட்டால், அவரை எதிர்த்து நான் போட்டியிடுவேன். இவ்வாறு சீமான் கூறினார்.

# ஈழத்துத் திருக்கோயில்கள்

1070



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கந்தளாய் சிவன்கோவில் திருகோணமலை

*" நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்*
*நமச்சிவாயவே நானறி வித்தையும்*
*நமச்சிவாயவே நாநவின்றேத்துமே*
*நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே. "*

ஆலய வரலாற்றோடு விரதங்களும் விழாக்களும் பின்னிப்பிணைந்து காணப்படுவதோடு, மக்கள் மனங்களிலும் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இறை வழிபாடு மனிதனிடம் காணப்படும் அகங்காரம், ஆணவம் போன்ற தீய பண்புகளை அழித்து நல்வழிப்படுத்த உதவுவனவாக அமைந்துள்ளன. உதாரணமாகத் தீபாவளிப்பண்டிகை இதனை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. மனிதன் பகுத்தறிவு என்ற பண்பு கொண்டவன். அறிவும், விவேகமும் கொண்ட உயர்ந்தவனாகக் கருதப்பட்டபோதிலும் அகங்காரமும், ஆணவமும் மனிதனைக் கீழ்நிலைக்குத் தள்ளி, அழிவை ஏற்படுத்துகின்றன. ஆறிவாற்றல்கொண்ட மனிதன் ஆக்கவும், அழிக்கவும் வல்லவனாகக் காணப்படுகின்றான். அவனது உயர்ந்த பண்புகளை அகங்காரம் மறைக்கின்றது. அகங்காரம் ஒடுங்கி, அடக்கம் மேம்பட்ட திருநாளாக தீபாவளித் திருநாள் அமைந்துள்ளது. இதன் தத்துவங்களை விளக்க பல புராணக் கதைகள் காணப்படுகின்றன. புராணங்கள் என்றால் அவை புராதனமானவை என்று கருத வேண்டும். வெறும் கட்டுக் கதைகளாக அவற்றைக் கொள்ளக்கூடாது. வுரலாற்றுச் சான்றுகள் கிடைக்காவிடத்து புராணக்கதைகள் பல சான்றுகளை வெளிப்படுத்துவனவாக பல சந்தர்ப்பங்களிலே அமைந்துள்ளன.

வாழ்கையோடிணைந்த தத்துவங்களை கதைகளாக்கி சாதாரண மக்களும் அடிப்படைத் தத்துவங்களை உணரும்வகையில், முன்னோர் உருவாக்கிய சிறந்த உத்தியே புராணக்கதைகளாகும். இவை இறை உணர்வை வளர்க்கவும், எண்ணம், சொல், செயல் என்பன சிறக்கவும் வழிகாட்டுகின்றன. தீபாவளி நரகாசுரனோடு தொடர்புடையது. காத்தற் கடவுளாகிய கிருஷ்ணபகவான் சத்தியபாமையோடு இணைந்து நரகாசுரனை அழித்தார். அவன் இறக்கும் தறுவாயில் நல்லறிவு பெற்று “தான் இறந்த தினத்தை பூமியிலுள்ளோர் யாவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும்” எனப் பிரார்த்தித்தான். அவ்வரத்தை பகவானும் அருளினார் என்பது புராண வரலாறு. தீமை செய்தவனை மன்னித்து, நன்மை செய்ய வேண்டும் என்ற அரிய கருத்தை இப்பண்டிகை விளக்குகின்றது. இவ்வாறான பல கதைகள் தீபாவளியோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. ஏவ்வாறாயினும் இருள் நீங்கி இன்ப ஒளிவீசும் திருநாளாக தீபாவளி அமைகின்றது. ஈழம் மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள ஆலயங்களில் இப்பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

கந்தளாயில் பல திருக்கோயில்கள் காணப்படுகின்றன. வரலாற்றுப் பெருமைமிக்க பல கோயில்கள் அழிக்கப்பட்டு, குடியேற்ற நிலங்களாக மாற்றம்பெற்றுவிட்டன. ஆயினும் அவ்வப்போது ஆலயங்கள் இருந்தமைக்கான வெளிப்பாடுகள் பல இடங்களிலே வெளிப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வரலாற்றுப்பெருமைகொண்ட கந்தளாய் சிவன் கோயில், இவ்வான சூழ்நிலையிலே காணப்படும் திருக்கோயிலாக விளங்குகின்றது. இக்கோவிலும், இக்கோவில் அமைந்துள்ள கந்தளாய்ப்பிரதேசமும் வரலாற்றுப் பெருமைமிக்க மன்னனான குளக்கோட்டு மன்னனோடும், ஏனைய சோழ அரசர்களோடும் தொடர்புடையது. கந்தளாய் சிவன்கோயிலின் ஆரம்பகால வரலாற்றை அறிவதன்மூலம், ஈழத்தை ஆட்சி செய்த சோழமன்னர்களின் வரலாற்றையும், காலத்திற்குக் காலம் தமிழ்மன்னர்கள் ஈழத்தை ஆண்ட வரலாற்றையும், இன்னும் பல செய்திகளையும் அறிந்துகொள்ள முடியும்.

சுவடிகளின் கூற்றுப்படி கிமு1300 ஆம் ஆண்டளவிலே மனுராசன் என்னும் மன்னன், கோணேசர் ஆலயத்தைக் கட்டினனான் என்று கூறப்பட்டுள்ளது. இவரது மகனான குளக்கோட்டு மன்னன், கோணேசகோயில் திருப்பணிகளை மேற்கொண்டுள்ளான். இதற்கு ஆதாரமாக, “முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே” என்ற கூற்று சான்றாகக் காணப்படுகின்றது. இவ்வாறான திருப்பணிகளைச் செய்து முடித்த குளக்கோட்டு மன்னன், கோணேசர் கோவிலைப் பராமரிப்பதற்காகப் பல திட்டங்களை மேற்கொண்டான். விவசாயத்தை விருத்தி செய்து அதன்மூலம் கிடைக்கும் பயன்களால், கோணேசர் கோவிலைப் பராமரிப்பதற்காகப் பல திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளான். அல்லைக்குளம், வெண்டரசன் குளம், என்பவற்றைக் கட்டி, இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல்விதைக்கும் விதைப்புத் தரையை உருவாக்கினான்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட நிலங்களிலே விவசாயம் செய்வதற்காகவும், திருக்கோணேஸ்வரத்தின் பணிகளைச் செய்வதற்காகவும், மருங்கூர், காரைக்கால், சிந்துநாடு போன்ற இடங்களிலிருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். குளக்கோட்டு மன்னனால் உருவாக்கப்பட்ட விவசாயப் பூமிகளுக்கு, நீர்ப்பாச்சுவதற்கு அல்லைக்குளம், வெண்டரசன்குளம் ஆகியவற்றின் நீர் போதாது, பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் கந்தளாய்க்குளத்தைக் கட்டி, மகாவலிகங்கையிலிருந்து வாய்க்கால் மூலம் கந்தளாய்க்குளத்தில் நீரைத் தேக்கினான். கந்தளாய்க்குளத்தின் உதவியால், கந்தளாய்பிரதேசத்தில் விவசாயம், எவ்வித தடையுமின்றி நடைபெற்றது என்ற கூற்று, கோணேசர் கல்வெட்டிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன், குளக்கோட்டு மன்னனுடைய திட்டப்பிரகாரம், சைவத்தமிழ்மக்களின் குடியிருப்புக்களும், பிராமணக் குடியிருப்புக்களும் கந்தளாயில் உருவாக்கப்பட்டன. பேராசிரியர் செ.குணரத்தினம் அவர்களுடைய கல்வெட்டு ஆராய்ச்சிகள் இதனை உறுதி செய்துள்ளன. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. 1952ஆம் ஆண்டுக்குப் பின் கந்தளாயிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் அக்கால அரசு, குடியேற்றத்திட்டங்களை நிர்மாணிக்க முற்பட்டபோது, இப் பிரதேசத்திலே குடியேறியவர்கள் நிலத்தினடியில், திருவுருவங்கள் பலவற்றைக் கண்டெடுத்துள்ளனர். இவற்றுள் பிள்ளையார், அம்பாள், மகாவிஷ்ணு முதலிய திருவுருவங்கள் குறிப்பிடத்தக்கவையாகக் காணப்பட்டன.

**- வளரும்...**

**ERAA PLAZA**
**5928 FINCH AVE EAST**
**SCARBOROUGH, M1B5P8**
**(647) 295-9299**

**value mobile**

**NEW TO CANADA?**
**COME SEE US TODAY FOR AMAZING DEALS ON PHONE & PLANS!**

**5G**
**ROGERS INFINITE**

**$42**
**PLUS TAX PER MONTH**

**தமிழில் உரையாடி உங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

**30GB DATA**

**UNLIMITED CANADA-WIDE WITH US CALLING**
**UNLIMITED CANADA & US TEXT & VIDEO MESSAGING**
**BRING YOUR OWN DEVICE OR GET A PHONE FROM US**

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 22)

*(Continued from last week)*

I referred to the split in the ACTC and formation of the ITAK in 1949. The last straw that broke the camel's back was GG Ponnambalam's decision to vote in favour of the Ceylon (Parliamentary Elections) Amendment Act, No. 48 of 1949 (Franchise Act) that robbed the 780,600 strong Tamils of Indian origin of their voting rights. In the census report for the year 1946 the Tamils of Indian origin constituted 780,600 (11.73%) slightly more than the population of Ceylon Tamils by 46,900 (0.71%)! The following Table 1 is reproduced from the Census Department of Ceylon:

Table 1

Population of Sri Lanka by ethnic group 1881 to 2012

| Year | Sinhalese | | Sri Lankan Tamils | | Sri Lankan Moors | | Indian Tamils | | Sri Lankan Malays | | Burghers/ Eurasian | | Indian Moors | | Others | | Total No. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | |
| 1881 Census | 1,846,600 | 66.91% | 687,200 | 24.90% | 184,500 | 6.69% | | | 8,900 | 0.32% | 17,900 | 0.65% | | | 14,500 | 0.53% | 2,759,700 |
| 1891 Census | 2,041,200 | 67.86% | 723,900 | 24.07% | 197,200 | 6.56% | | | 10,100 | 0.34% | 21,200 | 0.70% | | | 14,200 | 0.47% | 3,007,800 |
| 1901 Census | 2,330,800 | 65.36% | 951,700 | 26.69% | 228,000 | 6.39% | | | 11,900 | 0.33% | 23,500 | 0.66% | | | 20,000 | 0.56% | 3,566,000 |
| 1911 Census | 2,715,500 | 66.13% | 528,000 | 12.86% | 233,900 | 5.70% | 531,000 | 12.93% | 13,000 | 0.32% | 26,700 | 0.65% | 32,700 | 0.80% | 25,600 | 0.62% | 4,106,400 |
| 1921 Census | 3,016,200 | 67.05% | 517,300 | 11.50% | 251,900 | 5.60% | 602,700 | 13.40% | 13,400 | 0.30% | 29,400 | 0.65% | 33,000 | 0.73% | 34,600 | 0.77% | 4,498,600 |
| 1931 Estimate | 3,473,000 | 65.45% | 598,900 | 11.29% | 289,600 | 5.46% | 818,500 | 15.43% | 16,000 | 0.30% | 32,300 | 0.61% | 36,300 | 0.68% | 41,800 | 0.79% | 5,306,000 |
| **1946 Census** | **4,620,500** | **69.41%** | **733,700** | **11.02%** | **373,600** | **5.61%** | **780,600** | **11.73%** | **22,500** | **0.34%** | **41,900** | **0.63%** | **35,600** | **0.53%** | **48,900** | **0.73%** | **6,657,300** |
| 1953 Census | 5,616,700 | 69.36% | 884,700 | 10.93% | 464,000 | 5.73% | 974,100 | 12.03% | 25,400 | 0.31% | 46,000 | 0.57% | 47,500 | 0.59% | 39,500 | 0.49% | 8,097,900 |
| 1963 Census | 7,512,900 | 71.00% | 1,164,700 | 11.01% | 626,800 | 5.92% | 1,123,000 | 10.61% | 33,400 | 0.32% | 45,900 | 0.43% | 55,400 | 0.52% | 19,900 | 0.19% | 10,582,000 |
| 1971 Census | 9,131,241 | 71.96% | 1,423,981 | 11.22% | 855,724 | 6.74% | 1,174,606 | 9.26% | 43,459 | 0.34% | 45,376 | 0.36% | | | 15,510 | 0.12% | 12,689,897 |
| 1981 Census | 10,979,561 | 73.95% | 1,886,872 | 12.71% | 1,046,926 | 7.05% | 818,656 | 5.51% | 46,963 | 0.32% | 39,374 | 0.27% | | | 28,398 | 0.19% | 14,846,750 |
| 2001 Census | | | | | | | | | | | | | | | | | |
| 2012 Census | 15,250,081 | 74.90% | 2,269,266 | 11.15% | 1,892,638 | 9.30% | 839,504 | 4.12% | 44,130 | 0.22% | 38,293 | 0.19% | | | 25,527 | 0.13% | 20,359,439 |

As mentioned already the Ceylon Citizenship Act of 1948 is the primary law governing nationality regulations in Sri Lanka was passed by the parliament on August 20, 1948. It came into force on 15 November 1948, just 285 days after Ceylon had gained independence from Britain. The Act granted citizenship to persons born in Sri Lanka to a Sri Lankan parent. However, it did not grant citizenship to Indian Tamils, who were about 11.73% of the population. As a result, n 780,600 people were denied citizenship and made stateless. At the first General Elections under the Soulbury Constitution (in 1947), the Ceylon Indian Congress (representing the Plantation Tamils) won seven seats and influenced the outcome of about 20 electoral constituencies.

Ponnambalam after spending 14 years in the Opposition benches was itching for a ministerial post. The 'carrot' of Cabinet position was too tempting for him to reject. He had earned fame as a brilliant criminal lawyer and undisputed leader of the Ceylon Tamils but not political power. In contrast, Chelvanayakam was then a new-face in the 1947 Parliament. GG Ponnambalam joined the Sinhalese dominated DS Senanayake's cabinet on September 03, 1948. In doing so he jettisoned the written pledge to fight for the rights of the Tamils of Indian origin. Despite the pledge he had signed with the Ceylon Indian Congress (as it was then known) in respect of Citizenship for the persons of Indian origin. To the credit of C. Suntharalingam he voted against the Bill and resigned his portfolio. DS Senanayake has demanded his resignation for violating joint cabinet responsibility.

GG Ponnambalam as founder and leader of ACTC prior to 1948 has castigated Sinhalese political leadership calling names. His outbursts against Sinhalese people and Sinhalese politicians saw the first Sinhalese - Tamils riots in 1939.

Jane Russell's book, 'Communal Politics under the Donoughmore Constitution 1931-1947', published in 1982, she mentions that she had interviewed Ponnambalam on March 14, 1974, for some details included in her work. [This was a doctoral thesis submitted to the University of Peradeniya in 1976.] What was interesting to me was Jane Russell's citation of Ponnambalam's verbal duels in the parliament. I provide excerpts that appear in page 157 of this book, because it provides some details about Hitler surrogates among the Sinhalese politicians who had designs on suppressing the rights of Tamil in Ceylon. To quote,

"The Hitlerian philosophy and rhetoric considerably affected communalist rhetoric in Ceylon. G.G. Ponnambalam said in Council in 1939:
'This is our home. We are inhabitants of this country and we have as much right to claim to have permanent and vested interests in this country, politically and otherwise, as the Sinhalese people. We do not propose to be treated as undesirable aliens. We will not tolerate being segregated into ghettos and treated like Semites in the Nazi states.' (Hansard, 1939, col. 890)

In January 1939 at a meeting in Balapitiya, [S.W.R.D.] Bandaranaike told the electors in this vein:
'I am prepared to sacrifice my life for the sake of my community, the Sinhalese. If anybody were to try to hinder our progress, I am determined to see that he is taught a lesson he will never forget.'

At the conclusion of the meeting, a lady in the audience, Mrs. Srimati Abeygunawardene likened Mr. Bandaranaike to Hitler and appealed to the Sinhalese community to give him every possible assistance to reach the goal of freedom. (Hindu Organ, January 26, 1939). This reported remark caused G.G. Ponnambalam to term Bandaranaike 'the pocket Fuehrer' (Hindu Organ, May 24, 1939)."10
Ponnambalam's taunt of Bandaranaike as 'the pocket Fuehrer' in 1939 was apt indeed. That Adolf Hitler's verbal demagoguery of Aryan dominance did influence quite a number of Sinhalese orator-politicians like Bandaranaike (1930s to 1950s), K.M. P. Rajaratne (1950s) and Ranasinghe Premadasa (1960s to 1980s) and Buddhist Bhikkhus, is a fact that remains hidden in the text books on contemporary Sri Lanka.
Therefore, the ill-fated decision by GG Ponnambalam to join DS Senanayake's cabinet as Minister of Industries, Industrial Research and Fisheries on 3 September 1948 was viewed by the Tamil people as an act of huge betrayal. A summersault least expected by his friends and foes. (To be continued)






MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

